Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆனி 10 ஆம் நாள் முஹர்ரம் 10 (24-6 61) சனிக்கிழமை | இதழ் 112

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்-2.

# நேருவுக்கு கென்னடி அழைப்பு

## சந்தித்துபேச இரு தலைவர்களின் ஆவல்

புதுடில்லி. ஜூன் 23

**இந்தியப் பிரதமர் நேருவை வாஷிங்டனுக்கு விஜயம் செய்யுமாறு, ஜனதிபதி கென்னடி உத்தியோக ரீதியில் அழைப்பு விடுத்திருப்பதாய் புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.**





நேருஜி-கென்னடி சந்திப்பு மிகவும் உபயோககரமாயிருக்கும் என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் இங்கு தெரிவித்தார். ஆனல் இன்னும் இதுபற்றி இறுதியான ஒரு முடிவு செய்யப்படவில்லையென்றும் அவர் கூறினர்.

திரு. கென்னடியின் அழைப்பை புதுடில்லியிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் பேராசிரியர் கல்பிரய்த் நேற்றிரவு நேருஜியிடம் சமர்ப்பித்தார் என்றும், இந்தியப் பிரதமரின் அமெரிக்க விஜயத்திற்கு தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

திரு. நேரு இன்று நிருபர்களிடம் பேசுகையில், தாம் ஜனதிபதி கென்னடியைச் சந்திக்கத் திட்டமிட்டுவருவதாயும், இருவரும் ஒருவருக்கொருவர் சந்தித்துப்பேச ஆவல் கொண்டிருப்பதாயும் தெரிவித்தார்.

இவ்வாண்டுக் கடைசிக்குள் இரு தலைவர்களும் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாடு

### முதல் தடவையாக சமசமாஜகட்சி கலந்து கொள்ளும்

கொழும்பு, வெள்ளி

செப்டம்பர் மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டில் முதல் தடவையாக லங்கா சமசமாஜக் கட்சியும் பங்கெடுத்துக் கொள்கிறது. டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, ஒரு பிரதிநிதியாக காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத்தின் இலங்கைக் கிளையினல் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்.

திரு. வி. பி. டி' சில்வா, திரு. ஏ. பி. ஜயசூரியா, திரு. டட்லி சேனநாயக்கா ஆகியோரும் இலங்கைப் பிரதிநிதிகளாகச் செல்வார்கள். காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் இலங்கைக் கிளையில் முன்பு லங்கா சமசமாஜக்கட்சி சேரவில்லை. காமன் வெல்த்துக்கு வெளியே இலங்கை ஒரு குடியரசாக இருக்க வேண்டுமென அது கூறிவருவதே இதற்குக் காரணம்.

## ராஜினுமாசெய்ய வேண்டுகோள்

கொழும்பு, வெள்ளி

முன்னர் வித்யோதய, வித்யாலங்கார பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி தற்போது கல்வி அமைச்சு, கல்வி இலாகா அலுவலகங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தாம் தற்பொழுது வகிக்கும் பதவிகளை உடனே ராஜினமாச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் இவர்களைக் கேட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கையை கல்வி அமைச்சின் தற்காலிக நிரந்தரக்காரியதரிசி திரு. எஸ். எவ். டி' சில்வா அனுப்பியுள்ளார்.

## களனி ஆலய 'கையிருப்பு 25 ரூபாய்!

கொழும்பு, வெள்ளி

கடந்த புதன் கிழமை களனி ராஜமகாவிகாரை புதிய டிரஸ்டியிடம் கையளிக்கப்பட்டபோது, 25 ரூபாயும், சில சதங்களுமே ஆலயத்தின் ரொக்கக் கையிருப்பாக ஒப்படைக்கப்பட்டது.

## ஆஸ்திரேலியா 8 விக்கெட் 286 ரன்கள்

லண்டன், ஜூன் 23

லண்டன் "லார்ட்ஸில்" இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்றுவரும் 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா தன் முதலாம் இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 286 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து ஏற்கனவே தன் முதலாம் இன்னிங்ஸில் மொத்தம் 206 ரன்கள் எடுத்திருந்தது.

## கிராம, சர்க்யூட் கோர்ட்டுகளில் சிங்களத்தில் வழக்கு பதிவு

### நீதிமந்திரி உத்தரவு

கொழும்பு, வெள்ளி

**கிராம, சர்க்யூட்கோர்ட்டுகளில் வழக்குகள் பதிவது, விசாரணை செய்வது ஆகியவற்றை சிங்களத்தில் மேற்கொள்ள வேண்டுமென நீதிமந்திரி திரு. ஸாம் பி. ஸி. பெர்ணண்டோ உத்தரவிட்டிருக்கிருர்.**

நீதிமந்திரி, பிரதமமந்திரியுடன் கலந்து பேசியபின், நீதிமன்ற மொழிச் சட்டத்தின்கீழ் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிருர். அநேக நீதிமன்றங்களிலுள்ள ஊழியர்கள் சிங்களத்தில் பயிற்சி பெற்றிருக்கிருர்கள் என்றும் மந்திரி தெரிவித்தார்.

## வர்த்தகருக்கு லைசன்ஸ் வழங்கும் மசோதா

கொழும்பு, வெள்ளி

வர்த்தகருக்கு லைசன்ஸ் வழங்கும் மசோதாவின் சகல சட்டங்களையும் பிரதிநிதிகள் சபை அங்கீகரித்துள்ளது.

காலஞ்சென்ற திரு. சகர பலனசூரியாவுக்கு அனுதாபத் தீர்மானம் ஒன்றையும் சபை நிறைவேற்றியது.

## புனிததந்தம்

அநுராதபுரம், வெள்ளி

நாளை மாலை 5 மணிக்கு சினப்புனிதத்தந்தம் அநுராதபுரம் வந்துசேரும். பிற்பகல் 2 மணிமுதல் நள்ளிரவு வரை தினமும் அது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

## நேற்றுமுதல் மடுமாதா திருவிழா ஆரம்பம்

### யாத்திரீகர்களுக்கு விசேஷ போக்குவரத்து ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

மடு யாத்ரீகர்கள், ரயிலிலிருந்து இறங்கியவுடன் தொடர்ந்து பிரயாணம்செய்ய துரிதமான பஸ் சேவைக்கு இ. போ, ச. ஏற்பாடு செய்துள்ளது. இன்றுமுதல் மடுமாதா திருவிழா ஆரம்பமாகிறது. இ. போ. ச வுடன் இணையும் முறையில் ரயில்வேக்கள், யாத்ரீகர்களுக்கு டிக்கெட்டுகளை வழங்கும். புறப்படும் இடத்திலிருந்து குறைந்த கட்டணத்தில் "ரிட்டன்" டிக்கெட்டுகள் வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## அங்கோலா

லிஸ்பன், ஜூன் 23

வடஅங்கோலாவில் தேசியவாதிகள் நடத்திய ஒரு தாக்குதலின் விளைவாய் ஒரு போர்த்துக்கேய சிப்பாய்கொல்லப்பட்டார்.

## ஜெட்விமான விபத்து

போன், ஜூன் 23

ஜெர்மனிக்கருகில் இரு ஜெட் விமானங்கள் விபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்தன. விமானிகள் காப்பாற்றப்பட்டனர்.

## இன்சூரன்ஸ் கம்பனிகள் விலக்கும் ஊழியர்கள்

### கார்ப்பரேஷனில் வேலை அளிக்க கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

இன்சூரன்ஸ் கம்பெனிகளிலிருந்து ஆள் குறைப்புக்குப் பலியாகும் ஊழியர்கள் அனைவருக்கும் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனில் வேலை அளிக்க அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டுமென நேற்று வர்த்தகசபை மண்டபத்தில் நடைபெற்ற இன்சூரன்ஸ் ஊழியர்கள் மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவனல்லை எம். பி. யும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஊழியர்கள் சங்கத்தின் தலைவருமான திரு. பி. ஆர். ரத்னயகா இக்கூட்டத்தில் பேசும்போது இன்சூரன்ஸ் கம்பெனிகளிலிருந்து கழிக்கப்படும் ஊழியர்களுக்கு கார்ப்பரேஷனில் வேலை அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை, எனக் கூறினர்.

## போக்குவரத்து திருத்த சட்டம் நிறைவேறியது

கொழும்பு, வெள்ளி

மோட்டார் போக்குவரத்து திருத்தச்சட்டம் நேற்றைய சபையில் நிறைவேறியது.

## பாதுகாப்பு - வெளிவிவகார அமைச்சின் பொலிஸ் பிரிவு

### சீக்கிரம் ஒழிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பொலிஸ் நிர்வாகப்பிரிவு சீக்கிரம் ஒழிக்கப்படும். பொருளாதார காரணத்தை முன்னிட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியால் இம்முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பிரிவிலுள்ள அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின்கீழ் கடமையாற்றுவார்கள்

## ருதுமங்கள ஸ்நான அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிலவஸு ஆனிமீ 10உ (24-6-61) சனிக்கிழமை பகல் 11 மணியளவில் வரும் சுப நேரத்தில், எனது கனிஷ்ட புத்திரி,

திருநிறை செல்வி

**கமலேஸ்வரி அம்மாளுக்கு**

ருதுமங்கள ஸ்நானஞ் செய்ய

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* 25-6-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

"கமலவாசம்",
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
1-6-61.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
க. சி. பொன்னுத்துரைப் பத்தரும்
பாரியாரும்.


# அங்கோலா அட்டூழியம்

## உலக திருச்சபை கண்டனம்

ஜெனிவா, ஜூன் 23

அங்கோலாவில் போர்ச்சுக்கல் செய்யும் அட்டூழியங்களை உலக திருச்சபையின் நிர்வாகசபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அங்கோலாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதாகவும் பெருந் தொகையான மக்கள் அங்கவீனர்களாக்கப் பட்டுள்ளதாகவும் திருச்சபை நிர்வாக சபை நேற்று ஜெனிவாவில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த 176 தேவாலயங்கள் அங்கம் வகிக்கும் சர்வதேசத் திருச்சபையின் நிர்வாக சபை சமீபத்தில் கூடி அங்கோலா நிலைமை பற்றி ஆராய்ந்தது.

அங்கோலாவில் வேண்டுமென்றே பெருந்தொகையான வர்கப் சித்திரவதை செய்யப்படுகிறார்களென்று திருச்சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நாட்டுக்கு வழிகாட்டக்கூடிய படித்த இளைஞர்கள்தான் போர்ச்சுக்கல் கொடுமைக்குப் பெரிதும் பலியாகிறார்கள் என்று குறிப்பிடும் அந்த அறிக்கையில் மனிதகுலத்துக்காக அங்கோலாவில் இழைக்கும் கொடுமைகளை போர்ச்சுக்கல் நிறுத்த வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

அங்கோலாவில் நிலைமை மிக மோசமாகி வருகிறதென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

### பிரிட்டிஷ் பிரதமர் சமாதானம்

நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன் பதிலளித்துப் பேசுகையில் போர்ச்சுக்கலுக்கு இரண்டு கப்பல்கள் விற்பதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இப்பொழுது ரத்துச் செய்வது சரியல்ல என்றார்.

இதற்குமுன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கெயிட்ஸ்கல் பேசுகையில் போர்ச்சுக்கலுக்கு வெடிமருந்துகள் அனுப்புவதை நார்வே அரசாங்கம் தடைசெய்ததைச் சுட்டிக் காட்டினர்.

### யூகோ-மாலி ஆதரவு

நேற்று யூகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோவும் மாலிகுடியரசு ஜனதிபதி கைட்டோவும் விடுத்த ஒரு கூட்டறிக்கையில் அங்கோலா மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்புக்கு மின்சார சக்தி

### ஒருகோடி ரூபாய் திட்டம்

மட்டக்களப்பு, வெள்ளி

இங்கினியாக் கலையிலிருந்து மட்டக்களப்பு மின்சார நிலையத்துக்கும், அதிலிருந்து பிரதான மின்சார நிலையத்துக்கும் கம்பிகளைப் புதைப்பதற்கு 40 மைல் நீளமான காடொன்றைக் கனடாவைச் சேர்ந்த பொறியியலாளர் ஆராய்ந்து வருகின்றனர்.

இரண்டு புதிய மின்சார உற்பத்தி இயந்திரங்களை நிறுவியதும் 10,000 கிலோவாட்ஸ் மின்சாரம் இங்கினியாக்கலையில் உற்பத்தியாகும். இதற்கான ஒருகோடி ரூபாம் செலவை கனடா அரசாங்கம் கொடுத்து உதவும். அதிகப்படியாகக் கிடைக்கும் மின்சாரம் கிழக்கு மாகாணத்துக்கும், ஊவா மாகாணத்திற்கும் விநியோகிக்கப்படும்.

## ஆபாச நூல்கள்

### பரிசீலனைசெய்ய ஒரு சபை

கொழும்பு, வெள்ளி

ஆபாசப் பிரசுரங்கள், ஆபாச இலக்கியங்கள் பற்றி நடவடிக்கையெடுப்பதற்கு உள்நாட்டு, கலாசார, கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா விரைவில் ஒரு சபையை நிறுவுவார்.

இச் சபை அமைக்கப்பட்ட பின்னர் நூலாசிரியர்களும் பிரசுரிப்பாளரும் தங்கள் வெளியீடுகளைப் பதிப்பிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு பிரதியையும் இச்சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இவைகளைச் சபை பரிசீலனை செய்தபின் தடைவிதிக்க வேண்டியதாக இருந்தால் தடை விதிக்கும். இல்லையேல் வெளியிடுவதற்கு அனுமதியளிக்கும்.

ஆபாச நூல்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இச் சபைக்கு அதிகாரமளிக்கப்படும்.

## சாராயத்திலும் பார்க்க அதிக கள்ளு விற்பனை

கொழும்பு, வெள்ளி

கலால் இலாகா விடுத்துள்ள அறிக்கையின்படி சென்ற 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி 1961 ம்ஆண்டு ஏப்ரல் மாதம் வரை எடுக்கப்பட்ட கணக்கின்படி சாராயம் சென்ற ஆண்டுகள் விலைப்பட்டதிலும் பார்க்க 2.3 வீதம் குறைந்து விட்டது என்றும் கள்ளு 6 வீதம் அதிகமாக விற்பனையானது என்றும் தெரிகிறது.

மேலும் சாராயம் விலை ஏற்றத்திலும் அத்துடன் கள்ளமாகத் தயாரிக்கப்படும் குடிவகைகள் மலிவாகக் கிடைப்பதனுலும் சாராய விற்பனை குறைந்திருக்கிறது என்றும் அதற்குப் பதிலாகக் கள்ளு அதிகமாக விற்பனையாகியுள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## நெல் கொள்வனவு இல்லை

முள்ளியவளை, வியாழன்

கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள சுமார் 15 பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களில், நெல் கொள்வனவு செய்தல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு நெல்லைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

## குளவி குத்தி சிறுவர் இருவர் பலி

சாவகச்சேரி, வியாழன்

குளவி குத்தியதால் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் மாண்ட பரிதாப சம்பவம் மீசாலை தெற்கில் நிகழ்ந்துள்ளது.

மீசாலை தெற்கில் ஒரு குளவிக்கூடு உடைந்ததால் அக்கூட்டிலிருந்த குளவிகள் அங்குள்ளவர்களைத் தாக்கத் தொடங்கின. அங்கு விளையாடிக்கொண்டிருந்த கோணன் ஐயாதுரை என்பவரின் ஏழு வயதுப் புதல்வனும் அப்புக்குட்டி தம்பு என்பவரின மகளும் குளவி குத்திய சிறிது நேரத்தில் உயிரிழந்தனர்.

மற்றும் பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ராஜரத்தின தம்பதிகளுக்கு 3 மாத லீவு

கொழும்பு, வெள்ளி

வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தினவுக்கும் ஊவாபரணகம எம். பி. திருமதி குசுமாராஜரத்தினவுக்கும் மூன்றுமாத லீவு வழங்கப் பட்டுள்ளது.

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று காலை கூடியபொழுது ராஜரத்தின தம்பதிகளுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென்று காலி எம் பி. திரு. டபிள்யு. தகநாயக்கா பிரேரணை கொண்டுவந்தார்.

## 'மோகன்' விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மகாநாடு

காத்தான்குடி, வெள்ளி

கல்லடி உப்போடை, மோகன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மகாநாடு திரு. சீ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. கே செல்லத்தம்பி (கி. ச. தலைவர்)

உப-போஷகர்: ஜே. வி. கணபதிப்பிள்ளை.

இணைக்காரியதரிசிகள்: திரு. எஸ். பகவத்சிங்கம், எஸ். தருமலிங்கம்.

தனதிகாரி: திரு. கே. தினகரன்.

கணக்குப்பரிசோதகர்: திரு கே. தங்கத்துரை. 6 பேர் கொண்ட நிருவாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.


## மலிவு விற்பனை

1. வெள்ளை முகந்துடைக்கும் துவாய்கள் (கரை போட்டவை) 21" × 34" ரூ. 1-40. 27" × 48" ரூ. 1-90. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

2. ஜூனியர் காஷ்மீர் சேலைகள் றவுக்கைத்துண்டுடன் - சில்க் பற்றன் உள்ளது. ரூ. 10-50, ரூ. 11-25, ரூ. 12-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

3. பெண்கள் "ரீ" சேட்டுகள். செக் போட்டவைகளும், சாதாக்களும் விலை ரூ. 2-25 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

4. இந்தியா "ஹான்ட்லூம்ஸ்" கைத்தறி படுக்கை விரிப்புகள் எல்லாக் கலர்களிலும் சோடி விலை ரூ. 7-50 மாத்திரம். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

5. புதிய ஜூனியர் கத்தான் பட்டு சேலைகள் எல்லாவித பூக்களுடன் கூடிய சாறியும் உள்ளது. முந்திய விலை ரூ. 75-00 தற்சமயம் ரூ. 37-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

6. புதிய பூஜை ஹான்ட்லூம்ஸ் கைத்தறிச் சேலைகள் சில்க் வேலை செய்யப்பட்டது. சரிகை கரையுள்ளது. ரூ. 22-90 மாத்மாத்திரமே. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

7. புதிய குற்ருலம் கைத்தறிப் பட்டுச் சேலைகள் தோய்த்துப் பாவிக்கக் கூடியவைகளும் நீண்டநாள் பாவிக்கத்தகுந்ததும். சில்க் புள்ளிகள் போடப்பட்டவை. விலை ரு. 19-50 மாத்திரம். டயரும்ஸ்,யாழ்ப்பாணம்.

## டயரும்ஸ்

விற்பனையில்

புதிய

"(f) பெதறெற்"

நூற் சேலைகள்

பசுமையான நிறங்களில் றிபன் போடரிட்டவை

அணிவதற்கு லேசானவை.

ரூபா 24/75 மாத்திரம்

**டயரும்ஸ்**

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

1 ஸ்ரீ 622 தொடர்பிலக்கமுள்ள "போட் கொன்சல்" (Ford Consul) நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: சிவபதி 5-ம் கட்டையடி கோப்பாய் வடக்கு என்ற விலாசத்தில் 25-6-61 ஞாயிற்றுக்கிழமை பார்வையிடலாம். அரியகுட்டி.


## அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன்

### புதிய மசோதா தயாராகிறது

கொழும்பு, வெள்ளி

வர்த்தக, உணவு, கப்பல் போக்கு வரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன, இலங்கை உற்பத்திப் பொருள்களை அரசாங்கம் ஏற்றுமதி செய்வதற்கானமசோதா ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அடுத்த ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில், அரசாங்க வர்த்தக காப்பரேஷன் மசோதா சமர்ப்பிக்கப்படும்.

சோஷலிஸ்ட் நாடுகளான செக்கோஸ்லவேக்கியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளுடன் இலங்கை தேங்காய், ரப்பர், தேயிலை ஏற்றுமதியைப் அதிகரிப்பதற்கான வழிவகைகளை மசோதா மேற்கொள்ளும்.

சோஷலிஸ்ட் நாடுகளின் வர்த்தகம், அரசாங்க வர்த்தக கூட்டு ஸ்தாபனங்களால்தான் நடத்தப்படுகின்றன. நமது நாடும் சோஷலிஸ்ட நாடுகளுடன் வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷன் நிறுவ வேண்டும். இந்தியாகூட சோஷலிஸ்ட் நாடுகளுடன் வர்த்தகம் செய்வதற்கு ஒரு அரசாங்க வர்த்தக கார்ப்பரேஷனை நிறுவியுள்ளது என்று வர்த்தக அமைச்சு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய மருந்துகள்

...றுநோயை (Cancer) வேர ...மென செயல் மூலம் நிரு...பட்ட மருந்து "யோகீஸ் ...ம்." தாய்க்குலத்தாரு... பெரும்பாடு—வெள்ளை ...ல் முதலியன எட்டு ...துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா "புற்றுநோய் நிபுணர்", ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## 'சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது நீங்கள்

சிரசு கண் மூக்கு சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும் வேண்டுமா ?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும் ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**மு. க. ஜெகநாதன்**

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்

# லாவோஸ்: தேசிய கலப்பு அரசாங்கம் அமைக்க உடன்பாடு

## மூன்று இளவரசர்கள் அறிக்கை

### யார் தலைமையில்? எப்பொழுது? என்ற விளக்கம் இல்லை

ஜெனிவா, ஜுன் 23

லாவோஸில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு லாவோஸின் முத்தரப்புத் தலைவர்களும் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

லாவோஸின் வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்ஊம், இடதுசாரித் தலைவர் இளவரசர் சொவன்னவாங், நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா ஆகியோர் சுவிட்சர்லாந்திலுள்ள சூரிச் என்ற நகரத்தில் சென்ற சில தினங்களாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக லாவோஸில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

லாவோஸில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு தாங்கள் உடன்பட்டிருப்பதாக மூன்று இளவரசர்களும் நேற்று சூரிச்சில் விடுத்த ஒரு கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

லாவோஸ் மன்னர் சவன்னவத்தனாவால் நியமிக்கப்படவிருக்கும் இந்த தேசிய கலப்பு அரசாங்கம் தற்காலிக அரசாங்கமாக இருக்கும்.

லாவோஸில் போர் நிறுத்தத்தை உறுதிப் படுத்துவது, சமாதானத்தை நிலைநாட்டுவது, ஜெனிவாவில் நடைபெறும் லாவோஸுக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் லாவோஸ் அரசாங்கப் பிரதிநிதியாக ஒரு பிரதிநிதியை அனுப்புவது ஆகிய அலுவல்களை இந்த கலப்பு அரசாங்கம் முதலில் கவனிக்கும்.

சுதந்திர நடுநிலைமை லாவோஸில் எல்லாப் படைகளையும் ஒரே தலைமையின் கீழ் கொண்டுவருவதென்றும் லாவோஸிலுள்ள அந்நிய துருப்புக்களை வெளியேற்றுவதென்றும் இராணுவக் கூட்டமைப்பு எதிலும் சேருவதில்லையென்றும் இராணுவக் கூட்டமைப்புப் பாதுகாப்பை ஏற்க மறுப்பதென்றும் மூன்று தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளதாக அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதமர் யார்? எப்போது அமையும்?**

லாவோஸின் புதிய தேசிய கலப்பு அரசாங்கம் யார் தலைமையில் அமைக்கப்படும்? புதிய அரசாங்கம் எப்போது உருவாகும்? என்பதுபற்றி அந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. என்ருலும் இவ்விரண்டு அம்சங்கள் பற்றியும் மூன்று தலைவர்களும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவார்களென்று அறியப்படுகிறது.

இராணுவக் கூட்டமைப்பு எதிலும் சேருவதில்லையென்றும் இராணுவக் கூட்டமைப்பு பாதுகாப்பு எதையும் ஏற்றுக்கொள்வதில்லையென்றும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது லாவோஸ் அங்கம் வகிக்கும் சியாட்டோ எனப்படும் தென் கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனத்தையே குறிப்பிடுவதாக அரசியல் அவதானிகள் வியாக்கியானம் செய்கின்றனர்.

**சோவியத் வரவேற்பு**

லாவோஸில் கலப்பு அரசாங்கம் அமைப்பது பற்றி மூன்று தலைவர்களும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து கூட்டறிக்கை வெளியிட்டதை "நல்ல ஆரம்பம்" என்று ஜெனிவா மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள சோவியத் யூனியன் பிரதிநிதியொருவர் கூறினர்.

பிரிட்டிஷ் பிரதிநிதியும் இதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

---

சண்டிகர், ஜுன் 22

தேர்தல்களில் கட்சிச் சின்னம் அளிப்பதற்கு, சுதந்திரக் கட்சியை அகில இந்தியக் கட்சியாக அங்கீகரிப்பது சாத்தியமல்லவென்று தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் தெரிவித்துள்ளார்.

# உலக நெருக்கடியை அதிகரிக்கும் குருஷேவ் பேச்சு பற்றி அமெரிக்க மந்திரி டீன்றஸ்க்

வாஷிங்டன், ஜுன் 23

பேர்லின் பற்றியும் படை குறைப்பு பற்றியும் சோவியத் பிரதமர் குருஷேவ் சமீபத்தில் தெரிவித்த கருத்து உலகநெருக்கடியை அதிகரிக்கக் கூடியதாக இருக்கிறது என்று அமெரிக்க ராசாங்க மந்திரி திரு. டீன்ற "க் நேற்று நிருபர்கள் மகாந டொன்றில் தரிவித்தார்.

ஜேர்மனி சம்பந்தமாக மேற்கு நாடுகளும் சோவியத் யூனியனும் இவ்வருடமுடிவுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்து கொள்ள மேற்கு நாடுகள் இணங்காவிட்டால் இவ்வருடமுடிவுக்குள் கிழக்கு ஜேர்மனியுடன் சோவியத் யூனியன் தனியாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்றும் சோவியத் பிரதமர் சென்ற புதன்கிழமை மாஸ்கோவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் அறிவித்திருந்தார். பொது படைகுறைப்பு யோசனைக்கு மேற்கு நாடுகள் இணங்காவிட்டால் அணு ஆயுதப்பரிசோதனைத் தடைக்கு ரஷ்யா சம்மதிக்காது என்றும் திரு. குருஷேவ் தெரிவித்தார்.

திரு. குருஷேவ் இப்படிக் கூறியது உலக நெருக்கடியை அதிகரிக்கும் என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்றஸ்க் நேற்றுக் கூறினர்.

மேற்கு ஜேர்மனியிடம் மேற்கு நாடுகளுக்குள்ள கடமைகளையோ உரிமைகளையோ மறந்துவிட முடியாதென்றும் இதை சோவியத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் திரு. டீன்றஸ்க் கூறினர்.

மேற்கு ஜேர்மனியுடன் மேற்கு நாடுகளுக்குள்ள கடமைகள், உரிமைகள் பற்றி திரு. குருஷேவ் தப்பெண்ணம் கொள்ளாமலிருக்க வேண்டுமென்றும் மேற்கு ஜேர்மனியிடம் மேற்கு நாடுகளுக்குள்ள உரிமைகளை எவரும் தடுத்து விடமுடியாதென்றும் திரு. டீன்றஸ்க் கூறினர்.

பொதுப் படைகுறைப்புடன் அணு ஆயுத பரிசோதனைத் தடை விஷயத்தை இணைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்று திரு. றஸ்க் அறிவித்தார்.

---

ஒரிஸ்ஸா

## புதிய மந்திரி சபை பதவியேற்றது

கட்டாக், ஜுன் 23

ஒரிஸ்ஸாவில் ராஷ்டிரபதி ஆட்சி முடிந்து புதிய மந்திரி சபை இன்று புவனேஷ்வரில் பதவியேற்றது.

காங்கிரஸ் கணதந்திர பரிஷத் கூட்டரசாங்கம் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு அங்கு ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

திரு. விஜயாநந்தபட்நாயக் தலைமையில் 7 மந்திரிகளைக் கொண்ட புதிய மந்திரிசபை இன்று புவனேஷ்வரில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றது.

அவசியமேற்படுமானல் தமது மந்திரி சபையை தாம் விஸ்தரிக்கக்கூடுமென்று ஒரிஸ்ஸா ராஜ்ய முதன்மந்திரி திரு. விஜயானந்தபட்நாயக் தெரிவித்தார்.

## துருக்கியில் பூமியதிர்ச்சி

இஸ்தான்புல், ஜுன் 23

சென்ற 24 மணி நேரத்தில் தென் துருக்கியில் ஏழுதடவைகள் பூமியதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. தென் துருக்கியில் ஒரு கிராமத்தில் மூன்று வீடுகள் முற்ருக உடைந்து நொருங்கியதாகவும் அதனல் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

# ஷோம்பே விடுதலை

## காங்கோ வளர்ச்சிக்கு ஒத்துழைக்க உறுதி

வியப்போல்ட்வில்லி, ஜுன் 23

காங்கோவை ஒரு சிறந்த நாடாக்குவதற்கு காங்கோவின் இதர தலைவர்களுடன் பூரணமாக ஒத்துழைக்கப் போவதாக கடாங்கா அதிபர் ஷோம்பே நேற்று அறிவித்தார்.

லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தினல் கைதுசெய்யப்பட்டு இரண்டுமாதங்களாக சிறை வைக்கப்பட்டிருந்த ஷோம்பே நேற்று விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பின் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேசிய ஷோம்பே காங்கோ இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மொபுட்டுவைப் பெரிதும் புகழ்ந்துபேசினர். மொபுட்டு அப்பொழுது ஷோம்பேக்கு அருகில் உட்கார்ந்திருந்தார்.

கடாங்கா இராணுவத்தைத் திருத்தி அமைக்க தீர்மானித்திருப்பதாக ஷோம்பே கூறினர். ஆனல் இதற்கு ஐ. நா. உதவிப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

லியப்போல்ட்வில்லி அரசாங்கத் தலைவர்கள் தன்னை மோசமாக நடத்தவில்லையென்றும் எவர்மீதும் தமக்கு வெறுப்பு இல்லையென்றும் ஷோம்பே கூறினர்.

ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூடும் காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தில் கடாங்கா எம். பி.க்கள் கலந்துகொள்வார்களென்று ஷோம்பே அறிவித்தார். ஆனல கடாங்காவின் வெவ்வேறு பகுதிகளிலும் உள்ள எம். பி.க்களை மிகக் குறுகிய காலத்தில் தொடர்பு கொண்டு லியப்போல்ட்வில்லிக்கு அழைத்துக்கொண்டு வருவது சுலபமல்ல என்று அவர் கூறினர்.

தாம் எலிஸபெத்வில்லிக்குச் செல்வதாகவும் பின்னர் லியப்போல்ட்வில்லிக்குத் திரும்பி வந்து காங்கோவின் முன்னேற்றத்துக்கு இதர தலைவர்களுடன் ஒத்துழைக்கபோவதாகவும் திரு. ஷோம்பே கூறினர்.

கடாங்கா இராணுவத்தை காங்கோ இராணுவத்துடன் ஒரே தலைமையின் கீழ் இணைக்க ஒபபுகொள்ளப்படடிருப்பதாக மேஜர் ஜெனரல் மொபுட்டு அறிவிததார்.

காங்கோ பார்லிமெண்ட் கூடும்சமயத்தில் காங்கோலியத் துருப்புககளின் ஆயுதங்கள் களையப்படுவதற்கு காங்கோ மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டது பெரிய தவறு என்று திரு. ஷோமபே கூறினர். இசசமயம் குறுக்கிட்டு ஏதோ சொல்ல எததனிதத மேஜர் ஜெனரல மொபுட்டுவை அபபொழுது தான அங்கு வந்து சோந லியப்போலட்வில்லி உளவிவகார மந்திரி த டுத்துவிடடார்.

## கேவல இல்லாதவருக்கு எம். பி.யன் உபதேசம

கொழும்பு, வெள்ளி

ரத்தோட்டை எம. பி. திரு. சந்திரசேன முனவீரா மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்றோர் சங்கததில பேசுகையில் வேலை கிடைககவில்லையென்று அரசாஙகத்தைக் குறைகூறிக் கொண்டு வருவதால பயனில்லை என்றும் கௌரவமான வேலை கிடைக்க வேண்டும் என்று கிடைதத வேலையைக் கைவிட்டுவிட வேண்டாமென்றும கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் படித்தவர்கள் தொகை கூடக் கூட போதிய கல்வியறிவு அற்றவர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாக இருககின்றது. எனவே சிறிதளவு படித்தவர்கள் எந்த வேலையையும் செய்யத் துணிய வேண்டும் என்ருர்.

வேலையில்லாத காரணத்தால் களவு, கள்ளத்தனமான வகைகளைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் எவரும் இறங்கக் கூடாதெனவும் அவர் கூறினர்.

## 'கதிரவன் இளம் விவசாயிகள் கழகம்'

காத்தான்குடி, வெள்ளி

கதிரவன் இளம் விவசாயிகளின் கூட்டமொன்று கழகத் தலைவர் திரு. சீ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது.

கழகத்துக்கென நிலம் உபகரித்து கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பது, கமத்தொழில் சம்பந்தமான சினிமாப் படங்களை விவசாயிகட்குக் காட்ட ஒழுங்கு செய்வது, கழகமூலம் பொது மக்களுககு ஒட்டு மாங்கன்றுகளை இலவசமாக விநியோகிப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றபபட்டன. கமத்தொழில் பகுதியைச் சேர்ந்த உணவு உற்பததி ஆலோசகர் திரு. வே. கருஷ்ணபிள்ளை உட்பட மற்ம [illegible]

# தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம்

## ரூ. 5கோடி ஒதுக்கப்பட்டது

சென்னை, ஜுன் 23

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசாங்க தகவல் போக்குவரத்து மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் நேற்று இங்கு அறிவித்தார்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள எட்டுத் துறைகளில் நான்கு துறைகளின் அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியடையுமென்றும் இதற்கு மொத்தம் பத்து கோடி ரூபாய் செலவாகுமென்றும் டாக்டர் சுப்பராயன் தெரிவித்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தை, பெரிய 'ஜெட்' விமானங்கள் இறங்கக்கூடியதாக அபிவிருத்தி செய்வதுபற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக டாக்டர் சுப்பராயன் அறிவித்தார்.

## ஆலயத்தில் கொள்ளை நடக்குமென எச்சரிக்கை

கும்பகோணம், ஜுன் 22

சாரங்கபாணி கோயிலில் ஆயுதம் தரித்த 50 பேர் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருப்பதாக, நிர்வாக அதிகாரிக்கு ஓர் அனமதேயக் கடிதம் கிடைத்துள்ளது. அதைத் தொடர்ந்து ஆலயத்தில் பொலிசார் பலதத பந்தோபஸ்து ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

## கென்னடி-இக்கேடா கூட்டறிக்கை

வாஷிங்டன், ஜுன் 23

ஜப்பானிய பிரதமர் இக்கேடாவும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் நேற்று ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

அணு ஆயுத சோதனைக் கட்டுப்பாடு, படைகுறைப்பு ஆகியவைகள்பற்றியும் ஆசிய நாடுகளுக்கு பொருளாதார உதவி பற்றியும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

முள்ளியவளை, புதன்

கருநாவற்பற்று தெற்கைச் சேர்ந்த, பெரியபுளியங்குளம் என்னுமிடத்திற் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் வருடாந்த பொங்கல் விழா, இம்முறையும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## கோபால்கஞ்ச் கலகம்

புதுடில்லி, ஜுன் 23

சமீபத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் கோபால்கஞ்ச் என்ற இடத்தில் நடைபெற்ற வகுப்புக் கலகம் சம்பந்தமாக பாகிஸ்தானிலுள்ள ஸ்தானிகர் காரியாலய அதிகாரி இந்திய அரசாங்கத்துக்கு விபரக் குறிப்பு அனுப்பியுள்ளதாக இந்திய அரசாங்க அறிக்கையொன்று தெரிவித்தது.

இக்கலகத்தில் காயமுற்றவர், காணமற் போனவர் உட்பட மொத்த ஆட்சேத எண்ணிக்கை 600 என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலகம் சம்பந்தமாகப் புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் மூலம் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் ஆட்சேதக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளது.

## மணிவாக்கு

நம்பிக்கைதான் நாளையப் பொழுதை இன்பகரமாகக் கற்பனை செய்யத் தூண்டுகிறது. இன்றைய துன்பங்களை மறந்து நாளைய இன்ப நிலையைச் சித்தரிக்க, நமக்குப் பெரிதும் துணையாயிருக்கும் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

— தாகூர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 10உ (24-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## மீன்கள்

சிலாபத்தில் மட்டுமே மீன் பிடிப்பதற்கான நவீன முறை பயிற்சியளிக்கும் நிலையத்தை ஆரம்பிப்பதென்றும் யாழ்ப்பாணத்திலே மற்றோர் நிலையத்தை ஏற்படுத்த முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது.

இவ்வித பயிற்சி நிலையத்துக்கு கட்டடம், மோட்டார் படகுகள், யந்திரங்கள், நிபுணர்கள் எல்லாம் தேவையென்பதும் இதற்கு அதிக பணம் வேண்டியிருக்குமென்பதும் உண்மையே. ஆனால் இலங்கையிலிருந்து கோடிக் கணக்கான பணம் மீனுக்காக வெளியேறுவதைக்கவனித்தால் இலங்கையிலே பல இடங்களிலில்லாவிட்டாலும், வடக்கிலும் கிழக்கிலுமாவது மற்றும் இரு பயிற்சி நிலையங்களை அமைப்பது அவசியமுமாகுமென்பதை உணரலாம். இதற்காகும் பணமும் முயற்சியும் வீணாகாது.

வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மீன்பிடிப்பதில் கைதேர்ந்தவர்களுள்ளனர். கடலில் வெகு தூரம் துணிச்சலுடன் சென்று மீன் பிடித்து வந்து நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கு உதவுகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நவீன முறையில் பயிற்சியோ அல்லதுவசதியோ இல்லை. இவ்வித பயிற்சி இருப்பின் இங்கு மற்ற இடங்களைப் பார்க்க அதிகமான மீன்கள் பிடிபடுவதுடன், மக்களுக்கு மலிவாகவும் தாராளமாகவும் மீன்கள் கிடைத்து நாட்டின் செலாவணியும் வெகுவாக மிச்சப்படலாம். உடனடியாக இங்கு மீன்பிடிக்கும் நவீன பயிற்சி நிலையத்தை அமைக்க முடியாவிடினும், கூடிய சீக்கிரம் அதை ஏற்படுத்த அரசாங்கமும், ஸ்தல ஸ்தாபனங்களும் கூட்டாக முயற்சி செய்ய வேண்டும்.

அதற்கிடையே சிலாபத்தில் அமைக்கும் நவீன மீன்பிடிப் பயிற்சி நிலையத்துக்கு வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் கூடுமானவரை அதிகமானவர்களைத் தெரிவு செய்து அனுப்பி அவர்களுக்குப் பயிற்சி அளிக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பெறுமென்று நம்புவோம். தேச நன்மையை முன்னிட்டாவது வடக்கை வாடவிடக்கூடாது.

## டாக்டரின் யோசனை

புதிய வைத்திய மாணவர்களுக்கு டாக்டர் ஸ்பிட்டல் ஓர் அருமையான யோசனை கூறியுள்ளார். "நீங்கள் படித்துப் பட்டம் பெற்றபின், கிராமப் பகுதிகளிலே அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே சேவை செய்ய வேண்டியிருக்கும். அப்போது உங்களுக்குப் பணம்கொடுத்த நோயாளர்களிடம் விசேஷ கவனம் காட்டி, மற்றவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. வைத்தியத்தொழில் புனிதமானது. பொறுப்புவாய்ந்தது. மனிதாபிமானத்துடனே இதைச்செய்ய வேண்டும். உங்கள் நோயாளரின் இன்பத்திலும் துன்பத்திலும் நீங்கள் பங்குபெற வேண்டும். நீங்கள் மனிதாபிமானத்துடன் பணிசெய்தாலே தொழிலில். நீங்கள் வெற்றி பெற முடியும். ஊக்கத்துடனும், சேவைஉணர்ச்சியுடனும் உழைக்கவேண்டியதவசியம்" என்று அறிவுறுத்தினர். அனுபவமிக்க இப்பெரியாரின் உபதேசத்தை எதிர்கால டாக்டர்கள் மட்டுமன்றி, இப்போது சேவையிலுள்ளவர்களும் பின்பற்றினல், அவர்கள் தங்கள் தொழிலில் மேன்மையடைவதுடன், நாட்டுக்கும் மேலான பணிசெய்து, மக்களின் அமோகமான அபிமானததுக்கும் ஆளாவர்.

## சீதனம்

நேற்று 'ஈழநாடு' மங்கையர் உலகிலே சீதன் முறையைக் கண்டித்து, திருமகள் காரசாரமாக எழுதியிருந்தார். சீதனம் வாங்குவது மானங்கெட்ட பிழைப்பென்றும், அவர்கள் பெண்களின் 'மானத்தையும் வாங்க முயல்வதாகவும் குறிப்பிட்டார். சீதன வழக்கத்தால் விவாகமாகாமல் சங்கடப்படும் பல பெண்களின் பெற்றோர்களும் இதைப் பூரணமாக ஆதரிப்பர். என்றாலும் பல வருடங்களாக ஊறிப்போன இந்த வழக்கத்தை உடனடியாக மாற்றிவிட முடியாது. கரவெட்டி வாணி கலைக்கழகத்தார் இந்த வழக்கத்தை ஒழிக்கப் பாடுபடப்போவதாக ஒரு செய்தி கூறுகிறது. நாடெங்கும் பல ஸ்தாபனங்களும், சிறப்பாகப் படித்த பெண்மணிகளும் முன்வரின் இந்தக் கூடாத பழக்கம் பெருமளவில் குறைய வழிபிறக்கலாம். இதற்கு ஆதரவாக இந்தியாவைப் போல் இங்கும் சட்டம் செய்யக்கூடிய சூழ்நிலையும் உருவாக வேண்டும்.

# ஒழுக்கத்துறையில் சட்டம்

## காந்திஜி தரும் விளக்கம்

**அரசினரின் சட்டங்களுக்கு நாம் உட்பட்டு நடப்பது போலவே ஒழுக்க விதிகளுக்கும் உட்பட்டு நடத்தல் வேண்டும். உண்மையில் ஒழுக்கச் சட்டம், அரசாங்க சட்டங்களையும், வியாபார விதிகளையும் விட எவ்வளவோ உயர்ந்ததென காந்திஜி இக் கட்டுரையில் விளக்குகின்றார்.**

சில காரியங்களை நாம் நல்லவை என்கிறோம்; மற்றும் சில காரியங்களைக் கெட்டவை என்கிறோம்; இயற்கையாகவே நமக்கு மகிழ்ச்சி தரும் காரியங்கள் உண்டு; அவ்வாறே நமக்கு வெறுப்புத் தரும் காரியங்கள் உண்டு. ஆனால், இவ்வாறு ஒரு காரியத்தை நல்லதென்றோ, கெட்டதென்றோ தீர்மானிக்கும் போது, அது நன்மை பயக்கக் கூடியதா, அல்லது தீமை பயக்கக் கூடியதா, என்று ஆராய்ந்து நாம் முடிவு கட்டுவதில்லை. பரம்பரையாக வந்த அபிப்பிராயங்கள் பல, நம் உள்ளத்தில் ஏற்கெனவே இருந்து வருகின்றன. இந்த அபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டே, நாம் மற்றவர்களுடைய காரியங்களை நல்லவை, கெட்டவை என்று நிர்ணயிக்கிறோம்.

ஒரு மனிதன் மற்றொருவனுக்குத் தீங்கு செய்வதாக வைத்துக் கொள்வோம். அதனல் நமக்கு யாதொரு தீமையும் விளையவில்லை என்றாலும், நாம் அதைத் தீய செயல் என்றே கருதுகிறோம். சில சமயம் தீங்கு இழைப்பவனிடம் நாம் அனுதாபமுள்ளவர்களாக இருத்தலும் கூடும். எனினும் சிறிதும் தயங்காமல் அவனுடைய தீச்செயலை கண்டிக்கிறோம். சில சமயம் நமது அபிப்பிராயங்கள் தவறுகிவிடுகின்றன. மனிதர்கள் என்ன நோக்கங்கள் கொண்டு காரியங்கள் செய்கிறார்கள் என்பதை நாம் எப்போதும் அறிய முடியாதிருப்பதால், இத்தகைய தப்பு அபிப்பிராயங்களுக்கு இடமேற்படுகிறது. இருப்பினும், செய்தவனின் நோக்கம் தெரியவில்லை என்பதற்காக நாம் காரியங்களைப் பரிசீலனை செய்யாமல் இருப்பதில்லை. தீய செயலால் நமக்கே லாபம் கிடைப்பதாய் இருந்தால் கூட, மனத்திற்குள் அது கெட்ட காரியம் என்பதை நாம் உணர்ந்தேயிருக்கிறோம்.

இதிலிருந்து விளங்குவது என்ன? ஒரு காரியம் நல்லதா கெட்டதா என்பது மனிதனுடைய சுயநலத்தையோ, விருப்பு வெறுப்புக்களையோ பொறுத்ததன்று. ஒழுக்கமும், நமது சொந்த விருப்பமும் பல சமயங்களில் மாறுபட்டு நிற்கின்றன. குழந்தையிடம் நமக்குள்ள அன்பின் காரணமாக, அதற்கு ஓர், அற்பப் பொருளைக் கொடுக்க நாம் விரும்பலாம். ஆனால், அப்பொருளைக் கொடுப்பதால் குழந்தைக்குத் தீமை விளைவதாய் இருந்தால், அதைக் கொடுத்தல் ஒழுக்கத்துக்கு விரோதமென்றே கருதுகிறோம்.

### அன்பு

அன்பு செலுத்துதல் நல்ல காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அன்பு செலுத்தும் முறை, ஒழுக்க வரம்புக்கு உட்பட்டிராவிட்டால், அன்பே விஷமாகிவிடும்.

ஒழுக்க நியமத்தில் மற்றொரு விசேஷம் உண்டு. அது என்றும் மாறுபடாத தன்மையுடையது. அபிப்பிராயங்கள் மாறுபடலாம்; ஆனால் நீதி நெறி எப்போதும் ஒரு படித்தாகவே இருக்கிறது.

ஓர் உதாரணம் கூறுகிறேன். நம் கண்கள் திறந்திருக்கும் போது நாம் சூரியனைக் காண்கிறோம். ஆனால் கண்ணை மூடிக் கொண்டால், சூரியன் காணப்படுவதில்லை. இதில் நம் கண்களின் நிலைமாறுதல் அடைகிறதேயன்றிச் சூரியன் ஒரு நிலையாகவே இருக்கிறான் அன்றோ?

ஒழுக்க விதிகளின் விஷயமும் இப்படித்தான். நமது அறிவுக்கண் அஞ்ஞானத்தால் மூடப்பெற்றிருக்கும் போது, நாம் நீதி தர்மத்தை அறிய முடிவதில்லை. அறிவுக்கண் திறந்துள்ளபோது அதை எளிதில் அறிந்து கொள்கிறோம்.

### ஒழுக்கம்

மக்கள் தங்கள் அறிவுக் கண்ணைத் துல்லியமாக வைத்திருப்பது மிகவும் கடினம். அவர்கள் சாதாரணமாக சுயநல நோக்குடன் விஷயங்களைக் கவனிப்பதால், அநீதியையும் நீதி என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் மக்கள் சுயநல நோக்கத்தை அடியோடு மறந்து ஒழுக்கத்தையே லட்சியமாகக் கொள்ளும் காலம் விரைவில் வரக்கூடும்.

ஒழுக்கம் என்பது இன்னமும் பாலியப் பருவத்திலேயே இருந்து வருகிறது. இதுகாறும் மனிதர்கள் பூத பௌதிகங்களின் உண்மையை மீறுவதிலேயே அதிக உற்சாகம்

(8ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

# மானிட வாழ்வு

பதுமன்

"ஐயோ! ஈயாகப் பிறந்திருந்தால் எவ்வளவு நல்லது. கள்ளுமுட்டிக்குள் வீழ்ந்து இறந்துவிடலாமே" என்று தினமும் கள் அருந்துபவர் ஒருவர் ஆசைப்பட்டதாக எங்கள் நாட்டுக் கவிஞர் ஒருவர் பாடியிருக்கின்றார். கற்பகதருவாகிய பனையிலிருந்து கிடைக்கும் கள்ளில் அவ்வளவு ஆசை அவருக்கு.

நாத்தாண்டியா விலுள்ள கருணதாசா றெட்றிகோ அப்படி ஈயாகப் பிறந்து கள்ளில் மூழ்கி இறந்துவிட விரும்பவில்லை. அவர் செல்வந்தர் ஒருவர் வீட்டில் நாயாகவோ அல்லது பூனையாகவோ பிறப்பதையே பெரிதும் விரும்பியிருக்கின்றார்.

கேடுகெட்ட இந்த உலகத்தில் மனிதப் பிறவி எடுப்பதிலும் பார்க்க நாயாகவோ அல்லது பூனையாகவோ பிறப்பதே மகாபுண்ணியமென்பது அவருடைய கருத்து.

### கடிதத்தில்

இப்படி எல்லாம் அவர் ஏதோ ஒரு கூட்டத்தில் 'லெக்சர்' அடித்ததாக எவரும் எண்ண வேண்டியதில்லை. மரவியாபாரி ஒருவரின் மாட்டுக்கொட்டிலுக்குள் கழுத்திற் சுருக்கிட்டுத் தனது உயிரை மாய்த்த கருணதாசா றெட்றிகோ தமது கடிதத்தில் இப்படி எழுதியிருக்கின்றார்.

றெட்றிகோவுக்கு இருபது வயது நிறையமுன்னரே அவருக்கு வாழ்க்கையில் இவ்வளவு வெறுப்பும் கசப்பும் உண்டாகிவிட்டது பாருங்கள்! ஒரு செல்வந்தரின்வீட்டு நாய்க்குக் கிடைக்கும் வாழ்க்கை தமக்குக் கிடைக்கவில்லையே என்று அவர் வருந்துமளவுக்கு அவருடைய வாழ்க்கைநிலை மோசமடைந்துவிட்டதே!

### மனிதப் பிறவி

எல்லாப் பிறவிகளிலும் பார்க்க மானிடப் பிறவியே மேலானதென்று சமய குரவர்கள் போதித்திருக்கின்றனர். ஆனல் இன்றைய சமூக அமைப்பில் நாயாகவும், பூனையாகவும் பிறப்பதே மேல் என்று எண்ணுமளவுக்கு உலக வாழ்க்கை அமைந்துவிட்டது.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்" என இறைவனை எண்ணித் துதிப்பதேயன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே என்கின்றார் பதுமனர்

### நாயின் யோகம்

'ஏதோ வாழ்க்கையில் வெறுப்புத் தட்டிய ஒரு வாலிபன் இப்படி நாயாகப் பிறக்க விரும்பியிருக்க வேண்டும். நாய்களின் வாழ்வும் ஒரு வாழ்வா' எனச் சிலர் கருதக் கூடும். ஆனல் சில நாய்கள் சுகவாழ்வு வாழவது உண்மையே. முன்னள் இலங்கைப் பிரதமர் ஒருவரின் நாய்க்கு மாதம் 200 ரூபாய் செலவா

(8ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

பிள்ளையார், நடராஜர், பார்வதி முதலிய மூர்த்திகளின் படங்கள் இலங்கை ஆங்கிலப் பத்திரிகைகளில் நேற்று வெளியாயின. இதைக்கண்டு வியப்புற்றேன். ஏன் தெரியுமா? இந்து சமய சம்பந்தமான எந்த விஷயத்தையும் இங்குள்ள ஆங்கிலப்பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்துவருவதே வழக்கம். அந்த வழக்கத்துக்கு மாருக இப்படங்கள் வெளி வந்தது பெரியகாரியமல்லவா?

* * *

அழகான இம்மூர்த்திகள் இதுவரை பல நூற்றாண்டுகளாக பொலன்னறுவையிலே பூமிக்கடியில்புதைபட்டுக் கிடந்தன. 50 வருடங்களுக்குமுன் அதே ஊரிலே அருமையான சில விக்கிரகங்கள் கிடைத்தன. அவற்றைக் கொழும்பு மியூஸியத்திலே கண்ணடிக் கூட்டுக்குள் அடைத்து வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து அவை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இந்நாட்டில் தமிழும் சைவமும் செங்கோலோச்சியதைச் சொல்லாமற் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

சென்றஅக்டோபரில் மேலும் கிடைத்த பல விக்கிரகங்களும் இப்போது எங்கே? என்று ஓர் அன்பரைக் கேட்டேன். அவை அனுராதபுரத்திலே எங்கோ இருட்டறைக்குள் இருப்பதாகச் சொன்னார். இதைக்கேட்க மிகவும் வேதனையாக இருந்தது.

இதற்குத்தானு இம்மூர்த்திகள் இப்போது வெளிப்பட்டனர்! இப்புனித விக்கிரகங்கள் மீண்டும் பொலன்னறுவை சிவாலயத்தில் கோயில்கொள்ளும் நாள் எந்நாளோ? ஈழத்திலுள்ள சைவ ஸ்தாபனங்கள் கண் விழித்து, முயற்சி எடுக்க வேண்டுமென்றே இதை இங்கு எழுதுகின்றேன்.

* * *

பிரம்பினல் மாணவர்களை இனி ஆசிரியர் யாரும் அடிக்கப்படாதென்றும், கையாலும் அடிக்கப்படாதென்றும், தலைமை ஆசிரியரே, மிக மோசமான குற்றம்செய்த மாணவ மாணவிகளை உள்ளங்கையில் பிரம்பால் 4 அடி அடிக்கலாமென்றும் கல்வி இலாகா புது உத்தரவு போட்டுள்ளது.

இன்றைய கல்விமுறை மாணவரைப் புத்தகப் பூச்சிகளாக்குவதாயும், இதனல் பல மாணவர் படிப்பில் கவனம் செலுத்தாமல் விஷமம் செய்வதாயும் அவர்களை அடிக்காமல் அடக்குவது மிகவும் கஷ்டமென்றும், இப்படிப்பு முறையையே மாற்ற வேண்டுமென்றும் ஓர் அன்பர் எழுதுகின்றார்.

மாணவருக்காக கல்வியேயன்றி, கல்விக்காக மாணவரல்லர்! இச்சமயம் பிரம்புகளைத் தகனம்செய்து அந்த சாம்பருடன் ஊர்வலம் நடத்திய வண. பிதா. லாங்கின் ஞாபகம்வருகிறது.

* * *

தன் "அல்ஜிப்ரா" கணக்குப் புத்தகத்தை விற்றுவிட்டு, ஒரு மாணவன் மிக ஆபாசமான புத்தகத்தை விலைக்கு வாங்கிப் படித்ததாகவும், ஆபாசப் புத்தகங்கள் மாணவ, உள்ளங்களைக் கெடுப்பதாகவும் ஒரு கல்விமான் மனவேதனையுடன் கூறுகின்றார்.

சென்னையிலிருந்து கவர்ச்சியான அட்டையுடன் வந்த ஒரு சஞ்சிகையைப் பார்த்தேன். அது கண்யமான ஒரு பத்திரிகை என்றே நினைத்தேன். அட்டைப் படத்துக்கு உள்ளே விமர்சனம் போட்டிருந்தார்கள். அதைப் படித்ததும் ஏன் இதைத் தொட்டோமென்று வருந்தினேன். இந்தமாதிரி ஆபாசப் புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், அடியோடு தடுப்பதுடன், அவ

(5ம் பக்கம் பார்க்க)

# தொழிலாளர் முட்டுக்கட்டைகளை நீக்க அரசாங்கம் முயல வேண்டும்

## ஜெனிவா மகாநாட்டில் திரு. சுந்தரம் பேச்சு

ஜெனிவா, ஜூன் 23

'அதிகமான தொழிலாளர்களுக்கு இலங்கையில் அரசியல் உரிமையும் சிவில் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது' என இலங்கைத் தொழிலாளர் தூதுகோஷ்டியைச் சேர்ந்த திரு. எம். பி. சுந்தரம் 100 நாடுகள் கலந்து கொண்ட சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டில் பேசும்போது இங்கு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கம் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கொள்கையை அனுசரித்து அங்கு தொழிலாளர்களுக்கிருக்கும் முட்டுக்கட்டைகளை நீக்குமென்பது எனது நம்பிக்கை.

இந்த மகாநாடு எனது கோரிக்கையை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

### வீடமைப்பு கடன் லாட்டரிச் சீட்டு மூலம் கொடுக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

தொகுதி வாரியாக 32,000 வீதமும் மாகாணவாரியாக ரூ. 2,000க்கும் ரூ. 15,000க்கும் இடைப்பட்ட தொகையையும் வீடு கட்டுவதற்குக் கடனைக் கொடுப்பதற்கு வீடமைப்பு அமைச்சு ஸ்தலஸ்தாபன பகுதிக்கான ஆலோசனைக் குழு ஒதுக்கத் தீர்மானித்துள்ளது. இத் திட்டம் விரைவில் செயல்படும் என்று வீடமைப்பு அமைச்சுஸ்தலஸ்தாபனப்பகுதி நிரந்தரக்காரியதரிசி திரு. வி. சி. ஜெயசூரியா கூறினர்.

மாதம் ரூ. 300க்குக் குறைந்த வருமானமுள்ளவர்கள் ரூ. 2000 கடனுதவிக்காக மனுச் செய்யத் தகுதியுள்ளவர்கள் கடனுக்கான மனுப்பத்திரங்கள் லாட்டரிச் சீட்டு மூலம் பரிசீலனை செய்யப்படும்.

### சமூக சேவைக்கு சுவீப் நிதி
#### மந்திரி கோரிக்கை

கொழும்பு, வியாழன்

ஆஸ்பத்திரி சுவீப்பின் மூலம் பெற்ற நிதியில் ஒரு பகுதியை சமூக சேவைக்காகச் செலவிட ஒதுக்கப்பட வேண்டுமென கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

கைத்தொழில் மந்திரி சுகாதார மந்திரிக்கு அனுப்பியுள்ள குறிப்பொன்றில் சமூகசேவை இலாகா அதிக அபிவிருத்தி வேலை செய்ய வேண்டியுள்ளதால் வருடா வருடம் செலவு அதிகமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூக சேவைக்கு ஆஸ்பத்திரி சுவீப் நிதியிலிருந்து உதவி செய்வதற்கு முன்னரே அனுமதி அளிக்கப்பட்டதென்றும் ஆஸ்பத்திரி சுவீப் சம்பந்தமான மசோதாவில் திருத்தம் செய்யப்படாதவரை இந்த நிதி உதவி சாத்தியப்படாது எனவும் சுகாதார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

விரைவில் இத் திருத்த மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் அவர் கூறினர்.

---

### தற்காலிக அதிபர்

காரைதீவு, வெள்ளி

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலைத் தற்காலிக அதிபராய்க் கடமையாற்றிய திருமதி ஆர். சின்னையா மட்டக்களப்பு வின்செண்ட் மகளிர் கல்லூரிக்கு அதிபராய்ச் சென்றதனல் திருமதி. எஸ். இரத்தினராஜா இக்கல்லூரித் தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### 'வீடு புகுந்து மேளத்தை உடைத்தனர்' சிவியாதெரு வழக்கில்
#### மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

முத்தன் பொன்னையா என்பவருக்குச் சொந்தமான ரூ. 30 பெறுமதியான மேளத்தை உடைத்ததாகவும் அவரது வீட்டுக்கு தீ வைத்ததாகவும் சிவியாதெருவைச் சேர்ந்த முருகன் சுப்பிரமணியம், நல்லன் பொன்னையா, வைரவன் அரியகுட்டி, ஐயன் மாணிக்கன், கதிரேசு மதியாபரனம், கதிர்காமு மார்க்கண்டு ஆகியோர் மீது பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வல்லிபுரத்தால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது பொன்னையாவின் மனைவி கனகம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 2-ம் திகதி இரவு 10 மணியளவில் 150 பேரைக் கொண்ட ஒரு கூட்டம் எங்கள் வீட்டை நோக்கி வந்தது. கூட்டத்தை எதிரி கூட்டிவந்திருந்தார். வந்தவர்கள் எங்கள் வீட்டிலிருந்த மேளத்தைத் தருமாறு என்னிடம் கேட்டார்கள். நான் கொடுக்க மறுத்தேன். எனவே முதலாவது எதிரியும் இரண்டாவது எதிரியும் கதவை உடைத்து உள்ளே வந்து மேளத்தை உடைத்தார்கள். மூன்ருவது எதிரியும் நான்காவது எதிரியும் எங்கள் வீட்டுக்குத் தீ வைத்தார்கள். ஐந்தாவது எதிரியும் ஆருவது எதிரியும் என்னையும் எனது குழந்தைகளையும் தாக்கினர்கள்.

திரு. சாம். ஏ. சபாபதி திரு. ஆர். விஸ்வநாதனின் உதவியுடன் எதிரி தரப்பில் ஆஜரானர்.

பொன்னையா தேவராசா என்னும் மாணவன் சாட்சியமளித்தபின் வழக்கை வரும் ஜூலை மாதம் 12-ம் திகதிவரை மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

---

### மார்க்கெட் விலை வாசிகள்

#### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், சனி

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 104 - 00 |
| நகைப்பவுன் | 98 - 00 |
| தங்கப்பவுன் | 100 - 50 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

---

### தெதுருஓயா யானைகள் வில்பத்துக்குள் விரட்டப்படும்

கொழும்பு, வெள்ளி

தற்காலிக விவசாய மந்திரி தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் தெதுரு ஓயா பள்ளத்தாக்கிலுள்ள யானைக் கூட்டங்களை 18 மைலுக்கப்பால் வில்பத்து காட்டுக்குள் விரட்டுவதென்றும், இம்முயற்சி தோல்வியடையுமானல் அடைப்பு முறையின் மூலம் அவைகளைப் பிடிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

கொழும்பு, வெள்ளி

ஆஸ்திரேலிய கண் காட்சி கப்பல் "ஸ்டிராட் பாங்கா" கொழும்பில் தங்கிய போது, ஆஸ்திரேலிய வர்த்தகத்தூதுக் குழுவினரால் 5 லட்சம் ரூபாய் பெறுமதியான வர்த்தக பரிமாற்றம் நடத்தப்பட்டது.

## இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனின் புதிய வேலைகள் அதிகமானவை
### திரு. ராஜகோபாலன் தெரிவிக்கும் கருத்து

கொழும்பு, வெள்ளி

"இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்டுள்ள புதிய வேலைகள் பெரிய இன்சூரன்ஸ் கம்பனிக்குள்ள வேலையிலும் பார்க்க புல மடங்கு அதிகமாக இருக்கலாம். இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் இப்போது தனது வேலைகளைச் சரிவர நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றது."

இவ்வாறு இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆலோசகர் திரு. ஏ. இராஜகோபாலன் கூறியுள்ளார்.

இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனைத் திருத்தி முறைப்படுத்துவதற்கெனத் திரு. இராஜகோபாலனை கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கம் இரண்டு வருட காலத்திற்கு இங்கு அனுப்பியுள்ளது.

ஜூலை மாதத் தொடக்கத்தில், இன்சூரன்ஸ் சிப்பந்திகளுக்குப் பயிற்சியளிப்பதில் தேர்ச்சி மிக்கவரான திரு. ஸ்ரீனிவாசராகவன் என்பவர் திரு. இராஜகோபாலனுக்கு உதவி செய்வதற்காக இந்தியாவிலிருந்து இங்கு வருவார். அவருடன் தேர்ச்சி பெற்ற இன்னுமொரு நிபுணரும் வருவார்.

திரு. இராஜகோபாலன் ஆலோசனையின் கீழ் இயங்கும் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஸ்தாபனம் இந்தியாவின் தேசிய இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் போன்று அமையமாட்டாது.

இந்தியாவிலே மத்திய பகுதிக் கந்தோர்களும், கரையோரப்பகுதிக் கந்தோர்களும் வேறு வேருகத் தொழிலாற்றுகிறது.

இலங்கையில் அவ்வாறில்லாது, எல்லாக் கந்தோர் அலுவல்களும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென திரு. இராஜகோபாலன் சிபார்சு செய்வார். இவ்வாறு செய்வது இலங்கைப் பொருளாதார நிலைக்கு ஏற்றதாகும் எனக் கருதப்படுகிறது.

### பிணத்தைப் பார்க்கச் சென்றவர்
#### நகையைக் களவாட முயன்ருர்

களுத்துறை, வெள்ளி

இறந்து கிடந்த ஒரு பெண்ணுடைய உடலிலிருந்த சில தங்க நகைகளைக் களவாட எத்தனித்த ஒருவரின் முயற்சி, அங்கிருந்த சிலரால் முறியடிக்கப்பட்டது.

இரவு நேரத்தின் போது, வீட்டுக்குள் பிரவேசித்த ஒருவர் இறந்துகிடந்த பெண்ணுக்குத் தனது இறுதி மரியாதையைச் செலுத்த வந்தவர் போல் பிணம் வைக்கப்பட்டிருந்த அறையினுள் நுழைந்தார். அப்போது இருவர் தான் நித்திரை செய்யாமல் விழித்திருந்தனர்.

தங்க வளையல்கள், அட்டியல் போன்ற நகைகளுடன் வளத்தப்பட்டிருந்த அப்பெண்ணின் சடலத்தைப் பார்க்க வந்தவர் சில நிமிடங்களுக்குப்பின்னர், அப்பிணத்திலிருந்து எதையோ களவாட முயற்சிப்பவர்போல் காணப்பட்டார்.

தமது செயலை சிலர் கண்டுவிட்டார்கள் என்று நினைத்த அவர் வீட்டைவிட்டு வெளியேற எத்தனித்த சமயம் அங்கு விழித்திருந்த இருவரும் அவரைப்பிடித்து களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

---

### ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ற்றை இங்கு விற்பவர்மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இளைஞர் மனதில் விஷத்தை இஞ்சக்ஷன் செய்யும் இவ்வித நூல்கள் அவர்கள் வாழ்க்கையையே பாழாக்கி, நாட்டையும் கெடுக்குமாதலால் இதில் மிகவும் கண்டிப்பாக அரசாங்கமும், ஸ்தல ஸ்தாபனங்களும், கல்வி ஸ்தாபனங்களும், பெற்றோர்களும் கண்காணிப்பாய் இருந்து இளைஞர்களைப் பாதுகாக்க வண்டும்.

## சட்டவிரோதமாக குடியேறுபவர்கள்
### பிடிப்பதில் ராணுவம் பொலிஸ் தீவிரம்

மன்னர், வெள்ளி

சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களை பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும்தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். புதிதாகக் குடியேறியவர்களை மாத்திரமன்றி, பல காலமாக இலங்கையில் இருக்கும் இந்தியர்களையும் பொலிஸார் பிடிக்கிறார்கள்.

சமீபத்தில் அடம்பன் என்ற இடத்தில் பிடிக்கப்பட்ட ஒரு பெண் உட்பட 24 பேர் மன்னர் பொலிஸ் நிலயத்திற்கு விசாரணைக்கு கொண்டு செல்லப் பட்டனர்.

---

### சைவ கலாசங்கத்தின் சமயப்பணி

புங்குடுதீவு, வியாழன்

"சைவசமயம் மறுமலர்ச்சியடைந்துவரும் இக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்மாலான சமயத்தொண்டு செய்ய வேண்டும். வார வழிபாடு, சமயத் சொற்பொழிவு, புராணப்படனம், சித்தாந்த வகுப்பு என்பவற்றை நடத்திவரும் இக்கலாசங்க ஆண்டு விழாவை மணிவாசகர் விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடவேண்டும்."

இவ்வாறு இங்கு நடைபெற்ற சைவ கலாசங்க ஆண்டு விழாவில் பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை பேசும்போது குறிப்பிட்டார். புங்குடுதீவு சிவன்கோவில் முன்றிலில் மணிவாசகர் திருநாளன்று நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதிஷ்டா பூஷணம் சிவத்திரு ஐ. கைலாயநாதக் குருக்கள் தலைமைதாங்கினர். வைத்தியர் திரு. சி. கணபதிப்பிள்ளை, ஆசிரியர் அ. சபாபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். புத்தாண்டு ஆட்சியாளர் 60 பேர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: பிரதிஷ்டாபூஷணம் சிவத்திரு ஐ. கைலாயநாதக் குருக்கள், செயலாளர்: வித்துவான் பொன். அ. கனகசபை, பொருளாளர்: பேராசிரியர் சி. சி. சதாசிவம்பிள்ளை. 7 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பெற்றது.

### புடவைக் கடையில் திருட்டு

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலயத்துக் கருகாமையிலுள்ள புடவைக் கடையொன்றில் சுமார் 400 ரூபாய் பெறுமதியான புடவைகள் திருட்டுப் போனதைத் தொடர்ந்து காங்கேசன்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினம், மயிலன் வீரன் ஆகிய இருவரையும் காங்கேசன்துறைப் பொலிசார் கைது செய்துள்ளனர். 305 ரூபாய் 10 சதம் பெறுமதியான புடவைகளைப் பொலிசார் மீட்டுள்ளனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.


### மலிவு விற்பனை

1. "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி "சுங்கிரி" செக் போட்ட சேலைகள் 6 யார் ரூ 14-75. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

2. "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி சேலைகள் றிபன் கரை பற்றன் போட்டவையும் குறு நாடு டிசைன் பற்றன் போட்டவையும். 6 யார் ரூ. 16-50. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

3. "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி சேலைகள் திறமான பெரிய கோடுகளும் சின்னக் கோடுகளும் போட்டவை. 7 யார் ரூ. 17-50. டயரும்ஸ்,யாழ்ப்பாணம்

4. "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி "பிறிமா" செக் போட்ட படுக்கை விரிப்பு பல கலர்களிலும் 50" × 90" ரூ. 6-00 ஒவ்வொன்றும். டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

5. "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி "அஜந்தா"படுக்கை விரிப்புகள் பெரிய செக் போட்டவை 50"×90" ரூ. 6-90. டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

6 "ஹான்ட் லூம்ஸ்" கைத்தறி"காஷ்மீர்"டிசைன் திறமான கலர்களில் 48"×90" ரூ. 15-50 டயரும்ஸ், யாழ்ப்பாணம்.

### தேவை

ஆங்கிலத்திலும், தமிழிலும் டைப் அடிக்கக் கூடிய ஒருவர் தேவை. காமர்ஸ் இன்ஸ்டியூட் பரீட்சையில் தேறியிருக்க வேண்டும். சுருக்கெழுத்து தெரிந்திருந்தால் நல்லது. 30 வயதுக்குக் குறைவானவர் சொந்தக் கையெழுத்தில் நற்சாட்சி விபரங்களுடன் விண்ணப்பிக்க:- "ஈழநாடு" லிமிட்டெட், யாழ்ப்பாணம்



# மாணவர் மலர்



## சிம்ஸன் கண்டுபிடிப்பு

—செல்வன்—

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளில் 'குளோரோபாம்' என்ற மயக்கமருந்து, முக்கியமானது. பல நூற்றாண்டுகளாக டாக்டர்கள் எந்தவித மயக்கமருந்தின் உதவியுமின்றி, சத்திர சிகிச்சை செய்து வந்தார்கள். இதனால் நோயாளர் கஷ்டத்திற்கும் மிகுந்த சிரமத்திற்கும் உள்ளானார்கள். நாளடைவில் சத்திரசிகிச்சை செய்யப்படும் நோயாளருக்கு ஈதர் என்ற மயக்கமருந்தைக் கொடுத்தார்கள். இந்த மருந்து எதிர்பார்த்த அளவு பலனைத் தரவில்லை. நோயாளி எப்பொழுது மயக்கநிலையிலிருந்து தெளிவுபெறுவார் என்று கணிக்கமுடியாமலிருந்தது. சில சமங்களில் நோயாளர் சத்திர சிகிச்சையின் மத்தியில் விழித்துக்கொண்டு அவதிக்குட்பட்டார்கள். எனவே, ஈதர் என்ற மயக்க மருந்து பயனற்றதென்று மருத்துவ விஞ்ஞானிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

ஜேம்ஸ் சிம்ஸனும் அவரது நண்பர்களும் ஈதருக்குப் பதிலாக ஏதாவது மாற்று மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆராய்ச்சி செய்து வந்தார்கள். ஜேம்ஸ் சிம்ஸனும் அவரது நண்பர்களும்கூடி மயக்கம் தரக்கூடிய பலவிதமான மருந்துகளைப் பரிசோதனை செய்து வந்தார்கள். மயக்க மருந்துகளை முகர்ந்து பார்த்து குறிப்புகளும் எடுத்துக்கொண்டார்கள். ஒரு நாளிரவு ஜேர்மனியில் அனுப்பப்பட்டிருந்த மருந்தை ஜேம்ஸ் சிம்ஸனும் அவரது நண்பர்களும் முகர்ந்தார்கள். சிறிதுநேரத்தில எல்லோரும் பிரக்ஞையை இழக்க வேண்டி நேரிட்டது. சுயநினைவு பெற்ற சிம்ஸன், நண்பர்களெல்லோரும் மயக்க நிலையிலிருப்பதைக் கண்டார். பரிசோதனைக்கு எடுத்துக்கொண்ட மருந்து நல்ல பயனைத்தரக்கூடுமென்று எண்ணி, மேலும் பரிசோதனைகளை மேற்கொண்டார். அவர் பரிசோதனைக்கெடுத்துக் கொண்ட இந்த மருந்தின் பெயர் குளோரோபாம்.பல பயங்கரமான சத்திரசிகிச்சைகளில், ஜேம்ஸ் சிம்ஸன் குளோரோபாமைமுகர்க்கும்படி கொடுத்தார். எதிர்பார்த்த அளவு நேரம் நோயாளிகள் மயக்க நிலையிலிருந்தார்கள். சத்திர சிகிச்சையின்பொழுது, மயக்க நிலையிலிருக்கும் நோயாளிகள் எந்தவித வருத்தத்தையும் உணர்வதில்லை. ஜேம்ஸ் சிம்ஸனின் இந்தப் புதிய கண்டுபிடிப்பு இன்றுவரையிலும் நோயாளருக்கும், டாக்டர்களுக்கும் நன்ருகப் பயன்படுகிறது.

சத்திரசிகிச்சை முடிந்த பிற்பாடும் நோயாளிகளுக்கு அபாயம் ஏற்படுவதுண்டு. காயத்திலிருந்து ஏற்புவலி உண்டாவதினல், மிகச்சிலரே சத்திர சிகிச்சையின் பிற்பாடு உயிர் தப்புகிறார்கள். டாக்டர்கள் சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக முடித்துவிடலாம். ஆனல் புண்ணில் அழுக்குப் பிடியாது தடுகக, டாக்டர்களால் முடியவில்லை. நாங்கள் சுவாசிக்கும் காற்றில், கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் இருப்பது அனைவருக்கும் தெரியும். காற்றிலுள்ள கிருமிகள், காயத்தில்படிந்துவிடுகின்றன. இதனல் காயம் மாருமல், நோயாளர் மிகவும் வருத்தப்படுகிருர்கள்.

லிஸ்டர் பிரபு காபோலிக் அமிலத்தை உபயோகிப்பதால் நோயாளர் மிக விரைவில் குணமாகிவிடுவார்கள் என்ருர். சத்திரசிகிச்சை செய்யும் டாக்டர்கள் ஆயுதங்களை காபோலிக் அமிலத்தால் சுத்திசெய்து கொள்ளவேண்டும். சத்திரசிகிச்சையின்பின் ஏற்படும் காயங்களை காபோலிக் அமிலத்தினல் சுத்திசெய்து பாதுகாக்கப்படுதல் அவசியம் என்று லிஸ்டர் பிரபு கருதினர்.

லிஸ்டர் பிரபுவின் கருத்து மற்றைய டாக்டர்களுக்குச் சிரிப்பைத்தான் கொடுத்தது. அவருடைய முறைகள் மிகவும் திருப்திகரமான முடிவுகளைத் தந்தன. சத்திரசிகிச்சையினல் ஏற்படும் மரணங்களின் தொகை குறைந்தது. நாளடைவில் எல்லா டாக்டர்களும் இவருடைய முறையைப் பின்பற்றினர்கள். இன்று எல்லா வைத்தியசாலைகளிலும் இவருடைய முறையை மிக நுட்பமாகக் கையாளுகிருர்கள்.

## மாமிசம் உண்ணும் தாவரங்கள்

சில பட்சிகளும், பிராணிகளும், மனிதரும்தான் மாமிசததை விரும்பி உண்பதாக நினைக்கிறோம். தாவரங்களும் கூட மாமிச பட்சணிகளாக இருக்குமென்பது தெரியுமா? இவை தம் விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்காகச் சிறு பொறிகளை அமைத்துத் தந்திரமாக வேட்டை ஆடுகின்றன. அப்பொறிகளே ஒன்றுக்கொன்று வேறுபட்டு அதிசயிக்கும் விதமாக இயக்கப்படுகின்றன.

"நெப்பந்தீஸ்" எனப்படும் பாத்திரச்செடிகளை அதிகமாகக் குளிர்ப்பிரதேசங்களில் நீர்நிலைக் கரைகளிலும் சதுப்பு நிலங்களிலும் காணலாம். இவற்றின் இலைகளின் நுனிகள் பற்றறிகளாக மாறி ஒவ்வொரு பாத்திரங்களைத் தாங்கும். ஒவ்வொரு பாத்திரத்திற்கும், பல வர்ணப்பட்ட மூடி ஒன்று அதன்வாயிற் பொருத்தப்பட்டிருக்கும். இது பெரும்பாலும் திறந்தபடியேதான் இருக்கும். பாத்திரத்திற்குள்ளே இருக்கும் பசைப்பிடிப்பான திரவப் பொருள் தேன்போல் தோன்றும். இதைத் தேன் என நம்பி உள்ளே செல்லும் பூச்சிகள் பசையிற் சிக்கிக்கொள்ளும். மூடியும் உடனே மூடிக்கொள்ளும். உட்சென்ற பூச்சிக்குப் பின்னர் மீட்சியே கிடையாது. பாத்திரம் சுரக்கும் நச்சுப்பதார்த்தம் பூச்சிகளைக் கொன்றுவிடும். உடனே அதன் உடலிலே உள்ள சத்துக்கள் யாவும் உறிஞ்சி எடுக்கப்பட்டுவிடும். பின்னர் மூடி திறக்கப்படும்.

நெப்பந்தீஸைப்போல் "யுற்றிக்குளோரியா" என்னும் ஒரு செடி தண்ணீருக்கடியில் வளர்கிறது. இதன் இலைகளிற் சில பகுதிகள் சிறுசிறு பாத்திரங்களாக அமைந்திருக்கும். உட்பக்கமாகத் திறந்திருக்கும் ஒரு கதவும் உண்டு. நீரோட்டத்தால் உள்ளே சென்ற பூச்சிகள் வெளிச்செல்ல முடியாது கதவு தடுத்துவிடுகிறது. இவ்வாறு இது பூச்சிகளைப்பற்றுகிறது.

"ஜெசேரா" எனும் மற்றொரு வகைச் செடி உண்டு. இதன் இலைகளில் விரல்கள் போன்று சிறு சிறு 'தடவிகள்' (Tentacles) உண்டு. இவற்றில் எப்போதும் ஒரு திரவப்பொருள் சுரந்து கொண்டேயிருக்கும். பார்வைக்குத் தேன் முத்துக்கள் பரவிக் கிடப்பதுபோற் தோன்றும். இப் போலி முத்துக்களால் மயங்கி எத்தனையோ பூச்சிகளும் சிறு பிராணிகளும் அவற்றின் மீது அமர்வதுண்டு. திரவப்பொருள் ஒரு புறம் அவற்றை அகலாது தடுக்க, விரிந்திருக்கும் தடவிகள் மறுபுறம் மடிந்து அவற்றை உள்ளே சிறைவைத்துவிடும். நச்சுப் பதார்த்தங்கள் அவற்றைக் கொல்ல உடலை உறிஞ்சிகள் உறிஞ்சி எடுத்துவிடும். பின்னர் 'தடவிகள்' விரிந்துநிற்கும்.

இத்தகைய தாவரங்கள் நைதரசன் என்ற மூலப்பொருளால் ஆன உப்புக்கள் குறைந்த இடங்களிலேதான் காணப்படும். தமது இந்தக் குறையை நிவர்த்தி செய்யவே பூச்சிகளையும் மாமிசத்தின் உதவிகளையும் நாடுகின்றன. இத்தகைய மாமிச பட்சணிகளை நீங்களே பரீட்சிக்கலாம். இத்தாவரங்களைக்கண்டால் அவற்றின் பொறிகளுக்குள் ஒருகல்லையோ, தடியையோ போட்டுப்பாருங்கள். ஒன்றும் ஏற்படாது. அவித்த முட்டைத் துண்டையோ அல்லது ஒரு சிறு இறைச்சித்துண்டையோ போடுங்கள் உடனே அப்பொறிகள் செயற்படும் ஏனெனில் அவற்றில் நைதரசன் உப்புக்கள் இருக்கின்றன.

பூச்சிபுழுக்களுடன் மட்டும் திருப்தியடையாது மனிதரையே உண்ணும் தாவரங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இப்பூதகரமான மரங்கள் ஆபிரிக்காவிலே கொங்கோக் காட்டிலே வளர்கின்றன. இவற்றுக்கு ஆலமரங்களுக்கிருப்பதுபோல், நீண்ட விழுதுகள் உண்டு. அவைகள் அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருக்கும். மனிதர் அருகிற் சென்றவுடன் அம்மரங்கள் தமது கைகளால் அவர்களை வளைத்துப் பிடித்துக் கொள்ளும். அவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதென்பது பிரமப்பிரயத்தனம். இப்படிப் பேய் மரங்களை இயற்கை தன்னுள்ளே வைத்திருப்பதும் ஓர் அற்புதம்தான்.

**மாணவர்களே!**

விஞ்ஞானத் துறையில் உலகம் முன்னேறிக்கொண்டு வரும் இக்காலத்தில் மாணவர்களாகிய நீங்கள் விஞ்ஞானத்தின் விந்தைகளைப்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும். விஞ்ஞானம் சம்பந்தமாக இங்கு வெளியாகும் கட்டுரைகளும் செய்திகளுமீ உங்களுக்கு மிகவும் உபயோகமானவை.

மாணவர் மலர்,
'ஈழநாடு.'
த. பெ. எண் 49
யாழ்ப்பாணம்.

## எஞ்ஜினியர் பசு

உயர்ந்த குன்றின் மீது கனவான் ஒருவர், ஒரு மாளிகை அமைத்தார். அந்த மாளிகையை அமைக்கும்போது கட்டடத்திற்குச் சுலபமாய்ப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு ஒரு பாதையைச் சிருஷ்டிப்பதைப்பற்றி ஒரு எஞ்ஜினியரிடம் யோசனை கேட்டார். எஞ்ஜினியர் அதற்கு, "ஒரு பசுவைக் கேட்போமே" என்று பதிலளித்தார்.

"பசுவா? இது என்ன விஞேதமாயிருக்கிறதே?" என்று கனவான் அதிசயமுற்ருர்.

"ஆமாம், பசுவைத்தான்!" என்று எஞ்ஜினியர் மறுபடியும் கூறினர். "பசுவிற்கு ஒரு தொழுவத்தை குன்றின் மீது அமைத்து அதில் நிறையத் தீனியையும் வைத்துப் பசுவைத் தினந்தோறும் காலையில் குன்றின் அடிப்பாகத்திக்கு கொண்டுபோய் விடுங்கள். மாலை நேரத்திற்குள் தினந்தோறும் அது தன் தொழுவத்திற்குத் திரும்ப எப்படிச் செல்கிறதென்பதைக் கவனித்தால் பாதையை அமைப்பதற்கு எது உத்தமமான வழி என்று நன்கு புலப்படும்" என்ருர்.

அவர் கூறியவாறு கனவான், பசுவுக்குத் தொழுவத்தை குன்றின் மீது அமைத்த சில வாரங்களுக்குள் பசுவின் கால் சுவடுகள் பாதைக்கு அஸ்திவாரம் போட்டு விட்டது.

# அறிவுச் செல்வம்

— ஜி. எம். —

★ முகத்தில் தடவிக் கொள்ளும் ஒருவகை நறுமணப் பொருளை 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து நாட்டினர் பயன்படுத்தியுள்ளார்கள். அந் நாட்டிலுள்ள மிகப் பழைய கல்லறைகளிலிருந்து கண்டெடுக்கப் பட்ட கூஜாக்கள், இன்றும் நறுமணத்தோடும் மெருகு குலையாமலும் இருக்கின்றனவாம்.

★ அணு ஆயுத சோதனைகளினல் ஏற்படும் கதிரியக்கத்தின் விளைவாக லியூகிமியா, புற்று; நோய் முதலியவற்றினல் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மரணமாவார்கள் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். கடந்த சோதனைகளின் விளைவாக 1,40,000 குழந்தைகள் உருச்சிதைந்து பிறந்தன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

★ 'காட்' என்ற மீன்கள் லட்சக்கணக்கான முட்டைகளை இடுகின்றன. ஆனல் இவைகளில் 10, 15 முட்டைகள் தான் பிழைக்கின்றன. மீதியெல்லாம் அழிந்து போகின்றன.

★ 'சொலமன்' என்ற இனத்தைச் சேர்ந்த மீன்கள் முட்டையிட்டதும், அதன் பக்கமே போகாது.

★ சூரியனைச்சுற்றி புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், சிறு கோளத்திரள்கள், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், ப்ளுடோ ஆகிய கிரகங்கள் சுற்றிவருகின்றன.

★ சாறு பிழியப்பட்ட கரும்புச் சக்கையிலிருந்து நைலோன் துணி தயாரிக்கப்படுகிறது. கரும்புச் சக்கையில் உள்ள நார்ப் பொருளுடன் 'பெண் டோசான்', 'லிக்ன்ஸ்' ஆகியவைகளும் அடங்கியுள்ளன. விசேஷ வெப்ப நிலையில், அமிலம் கலந்து பக்குவப் படுத்தும் போது மஞ்சள் நிறமுள்ள எண்ணெய் ஒன்று வெளிப்படுகின்றது. இந்த எண்ணெய் நைலோன் தயாரிப்பில்பயன் படுத்தப்படுகிறது.

★ கோடை காலத்தில் குளிர்ச்சியையும், மழை காலத்தில் வெப்பத்தையும் தந்து உடம்பை இதமாகப் போற்றிக் காக்கும் புது வகை ஆடை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மெல்லிய அலுமினியத் தகட்டைச் சாதாரண ரேயன் துணியின் ஒரு புறத்தில் ஒட்டுவதின் மூலம் இப்பயன் விளைகிறது.

★ முதன் முதலாக வெளியான ஆங்கிலப் பத்திரிகை 'தி வீக்லி நியூஸ்' என்பது தான். இப் பத்திரிகை 1662-ம் ஆண்டில் பிரசுரிக் கப்பட்டது.

★ நாம் இப்போது பயன் படுத்தி வரும் பாத்திரங் கள் செய்வதற்கு வேண்டிய எவர் சில்வரை பிரயர்லி என்ற ஆங்கிலேயர் 1916-ம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

★ செவ்வாய், சுக்கிரன் போன்ற சில கிரகங்களில் நிலவுலகில் உள்ள மனிதனை விட அறிவுத்திறம் வாய்ந்த அற்புத மனிதர்கள் இருக்கக்கூடுமென்று ரஷ்ய நாட்டு வானநூல் வல்லுநர் திரு. பீலிக்ஸ் கேசல் என் பவர் கருதுகிருர்.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
Leyden L.I.L
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
இன்றைய தேவை: சுதேசிப் பெருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேசுகளை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ‘இயற்கையோடு இணைந்த வாழ்க்கையே சமயம்’

## மாணிக்கவாசகர் விழாவில் பேச்சு

திருநெல்வேலி, வெள்ளி

“சமயம் என்பது ஒரு சிக்கலான பாதை அல்ல. இயற்கையோடிணைந்த வாழ்க்கை முறையே சமயம். சமயம் வளர்தலும் தளர்தலும், அச்சமயத்தை அனுட்டிப்பவரின் தன்மையிலேயே தங்கியிருக்கின்றது. சமயத்தின் வாழ்வும் வளர்ச்சியும் சமய உண்மை நெறியில் வாழ்பவர்களிடமே அமைந்துள்ளது. அவ்வாறு சமய நெறியில் ஒருவர் வாழ்ந்துவரின் சமயம் அழிகின்றது என்ற சொல்லுக்கே இடமில்லை. அன்று நாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்த சமய நெறியாளர், சிவநெறியாளர் எத்தனை பேர் என எண்ணுகையில் திலகவதியாரும் மணிவாசகருமாக இருவரே என உணரக்கிடக்கின்றது.”

இவ்வாறு பண்டிதைர்மி அதாம்பிகை சதாசிவம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் கிருஷ்ணபிள்ளை இல்லத்தாரால் கொண்டாடப்பட்ட மாணிக்கவாசகர் விழாவில் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது சம்யகுரவா சமயத்துக்கு ஆற்றிய தொண்டுகளையும் சிறப்புகளையும் எடுத்து உரைத்தார்.

முதலியார் செ. சின்னத்தம்பி பேசுகையில் மாணிக்கவாசகர் அருளற நிலையினர் என்றும் அவரது திருவாசகம், திருக்கோவையார் முதலிய நூல்கள் செந்தமிழ்த் தேனொழுகும் சிறந்த படைப்புகளென்றும், மணிவாசகர் பேரின்பத்தில் அகப் பொருளைக் கண்டு திருக்கோவையார்மூலம் அளித்திருக்கிறாரென்றும், இவைகள் சிறந்த இலக்கியங்கள் என்றும் சொன்னார்.

விழாவில் இன்னிசைக் கச்சேரிகளும் இன்னும் பலருடைய சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

## சுருக்கிட்டுத் தற்கொலை

மாவிட்டபுரம் வெள்ளி

கருகம்பனையைச் சேர்ந்த வைத்திலிங்கம் அன்னலட்சுமி என்னும் பெண் (30) கழுத்திற் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். மரண விசாரணை அதிகாரி திரு. எம். பூதப்பிள்ளை தனது தீர்ப்பில் அன்னலட்சுமி வயிற்றுவலி காரணமாக வேதனை தாங்கமுடியாமல் கழுத்திற் சுருக்குப்போட்டு இறந்ததாகக் கூறினர்.

## நஞ்சுகலந்த உணவை சாப்பிட்டு ஒருவர் மரணம்

கொழும்பு, வியாழன்

மகா இலுப்பள்ளம அரசாங்கப் பண்ணை பாடசாலையைச் சேர்ந்த 11 மாணவர்களும், அங்குள்ள ஒரு தொழிலாளியும் நஞ்சுகலந்த உணவைச் சாப்பிட்டதன் காரணமாய் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பின் குறித்த தொழிலாளி ஆஸ்பத்திரியில் மரணமானர். தாங்களே தயாரித்த தயிரைச் சாப்பிட்டதால் அனைவரும் சுகவீனமுற்றதாய் ஒரு மாணவர் கூறினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**சனி 24-6-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரை இசை 8-00 நாகஸ்வரம் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பறந்ததின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம் 5-45 திரை இசை 6-15 கிராமசஞ்சிகை 6-45 வீணை.

இரவு 7-00 இசைமலர் 7-15 வையின்யாசம் 7-30 நேயர் கடிதம் 7-45 பிஸ்கா செல்லப்பா—பாட்டு 8-15 அறிவுச் சுழல் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்ாமிய கீதங்கள் 9-45 உருதுப் பாடல்கள் 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 25-6-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 8-30 திரை இசை 8-00 ஞால் இசை 8-30 “ஞானஅஞ்சலி” 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-30 கதம்ப இசை 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம் 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள் 5-15 எஸ். சர்வீஸ்வரசர்மா—வயலின் 5-45 திரை இசை.

இரவு 7-15 மாதர்கேட்டவை 7-45 ‘சத்தியவதி’-நாடகம் 8-15 நாடகம் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய கீதங்கள் 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

**சனி 24-6-61**

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 எஸ். வி. அச்சுதன்—வயலின்

பகல் 1-00 பக்திப்பாடல்கள் 2-10 எஸ். வி. அச்சுதன்—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ‘நன்றி காத்தவன்’—நாடகம் 8-10 திரைப்பட இசை 8-30 டெல்லி அஞ்சல் 8-40 இசைமாலை 9-30 அகிலபாரத சங்கீதம்.

**ஞாயிறு 25-6-61**

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 இசைக்கோவை 8-15 எஸ். ரமணி—புல்லாங்குழல்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை 12-30 சூரியகாந்தி கதம்ப நிகழ்ச்சி 1-00 மணிமலர் 2-10 பெண்ணுலகம் 2-30 மெல்லிசை 3-00 சிதம்பரம் கே. கோமதி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஸ்ரீவைகுண்டம் எஸ். பரமசிவம்பிள்ளை—பாட்டு 8-30 இசைக்கோவை 9-15 வாத்திய இசை.




# அமெரிக்காவில் இலங்கை பாராளுமன்ற தூதுகோஷ்டி

## வெள்ளப்பெருக்கை தடுக்கும் முறையை ஆராய்ந்தனர்

டெக்ஸாஸ், ஜூன் 22

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பாராளுமன்றக் குழுவினர் செவ்வாயன்று ராஜ்ய, நகர, தனியார் துறை ஸ்தாபனங்கள் அனைத்தும் வெள்ளைப் பெருக்கைத் தடுப்பதற்கு எம்முறையில் ஒத்துழைக்கின்றன என்பதை நேரடியாகப் பார்வையிடுவர்.

கோடைக்கால வெள்ளப் பெருக்கினல் பாதிக்கப்பட்டுள்ள ராஜ்ய தலைநகர் ஆஸ்டினுக்கு இவர்கள் செவ்வாயன்று விஜயம் செய்தனர். வெள்ளநிவாரண வேலைகள் பற்றிய தகவல்கள் நூறு மைலுக்கு அப்பாலுள்ள டெக்ஸாஸ் விவசாய யந்திர சாஸ்திரக் கல்லூரிக்கு வானொலி, டெலிபோன் மூலமாக அறிவிக்கப்பட்டது. "இது உண்மையில் ஒரு கூட்டுறவு முழு முயற்சியென" தூதுக் குழுவின் தலைவர் திரு. ஸி. பி. டி' சில்வா குறிப்பிட்டார். "இலங்கையை வெள்ளம் பாதிக்கும் பொழுது பல கோடி ரூபாய்க்குச் சேதம் உண்டாக்குவதுடன், கால்நடைகளை அழித்து, பல உயிர்களையும் பலி வாங்கி விடுகிறது. 1957-ம் ஆண்டு வெள்ளப் பெருக்கின்போது இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிய உதவியை நம்மக்கள் இன்றும் நினைவுகூருகின்றனர்". என்ருர். அப்பொழுது அமெரிக்க கடற்படை விமானம், ஹெலிகாப்டர்கள், மீட்புப்படை சகிதம் மருந்துகள், உணவுப் பண்டங்கள் முதலியவற்றையெல்லாம் இலங்கைக்கு அனுப்பி வைத்தது. "இது உண்மையில் ஒரு மகத்துவமான மனித முயற்சி" என ராசீக் பரீட் குறிப்பிட்டார்.

கடந்த ஒரு வார காலமாக பெய்த மழையினல் ஆஸ்டின் நகருக்கூடாக கொலராடோ நதிக்குத் தண்ணீர் செல்லும் வாய்க்கால்கள் அனைத்தும் அரிக்கப்பட்டுவிட்டன. இதனல் தண்ணீர் கட்டுமீறிப் பாயத் தொடங்கியது. பள்ளத்தாக்குப் பகுதிகளிலிருந்து முன்நூற்றுக்கு அதிகமானேர் மீட்புப் படையினரால் வெளியேற்றப் பட்டுள்ளனரென இங்கு கிடைத்த அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பாராளுமன்றக் குழுவினர் எழுபத்தி ஐயாயிரம் மாணவர்கள் கல்வி பயிலும் டெக்ஸாஸ் விவசாய யந்திர சாஸ்திரக் கல்லூரியில் இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு செவ்வாயன்று புறப்படுவர். கல்லூரியில் தங்கியிருக்கும் பொழுது வித்தியாபீட அங்கத்தவர்கள், இலங்கையில் பணிபுரிந்த பேராசிரியர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதுடன், நாலாயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள கல்லூரித் திடலைப் பார்வையிட்டு, அங்கு பயிற்சி பெறும் இலங்கை மாணவர்களையும் சந்தித்தனர். அமெரிக்க வெளிநாட்டு உதவியை நிர்வகிக்கும் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகத்தின் ஆணையின் பேரில் டெக்ஸாஸ் பேராசிரியர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

பாராளுமன்றக் குழுவினர் ஆஸ்டின் நகர் போய்ச் சேர்ந்ததும் எம்முறையில் வெள்ள நிவாரண வேலைகள், மீட்புப் பணிகள் நடைபெறுகின்றதென்பதை நேரடியாகப் பார்வையிட்டனர்.

## இரத்தினக் கம்பளம்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

யிற்று என்ற பேச்சு பார்லிமெண்டில் கூட அடிபட்டது. நாய்க்கென வசிக்க ஒரு நல்ல அறையும் நேரத்துக்கு நேரம் போஷாக்கான உணவும் அதற்கு அளிக்கப்பட்டது. நாய்க்குக் காவலாக ஒரு காவலாளரும் அமர்த்தப்பட்டார். இப்படிச் சில நாய்கள் இராச யோகத்துடன் வாழ்வது உண்மைதான்.

### மழை பொழிந்தது

"நாடு வரண்டது; நாடகமாடினர்; மழை பொழிந்தது! என்று சொன்னல் யார் நம்புவார்கள். ஆனல் ஹாவாயியைச் சேர்ந்த நடன கோஷ்டி ஒன்று புளோரிடா சென்று நடனமாடியபோது இடி இடித்து மழை பொழிந்தது."

மழையின்றி வாடிய அந்நாட்டு மக்கள் அந்நடனக் கோஷ்டியை அழைத்தபோது, அக்கோஷ்டியினர் மழைபெய்ய வைப்பர் என அவர்கள் நம்பியிருக்கவில்லை. ஆனல் நடன நிகழ்ச்சிகள் முடிவடைந்து சில நிமிஷ நேரத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டிற்று. நடனத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பத்தாயிரம் பேரும் மழையில் நனைந்து போய்விட்டனர்.

வரட்சி நிலைமை நீடிக்குமென தகவல் தெரிவித்த வானிலை ஆராய்ச்சி நிலையம் இதுபற்றி 'கப்சிப்' என்று இருந்துவிட்டதாம்.

## ஒழுக்கத்துறையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி வந்திருக்கிருர்கள். ஒழுக்க விதிகளை ஆராய்வதற்குப் பதிலாக, அவர்கள் இயற்கை விதிகளை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டு வந்தார்கள். அவ்வளவு திரத்துடனும், தன்னல மறுப்புடனும் ஒழுக்க நியமங்களைப் பரிசீலனை செய்வதில் ஈடுபட்டுத் தம் வாழ்நாளை அதிலேயே செலவிட்ட பண்டிதர் ஒருவரை நாம் இதுவரை கண்டதில்லை.

பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களைப்போல், நீதி சாஸ்திரப் பரிசீலனையில் ஈடுபடவும் மனிதர்கள் முன்வந்தால்தான் ஒழுக்க விதிகள் சீர் பெற்று அமையும். மற்ற சாஸ்திரங்களின் ஆராய்ச்சியில் மாறுபட்ட கருத்துக்கள் அதிகம் இருப்பதைக் காண்கிரேம். ஆனல் ஒழுக்க முறையில் இவ்வளவு கருத்து வேற்றுமை உண்டாவதற்கு இடமில்லை. கொஞ்ச நாள்வரை, இவ்விஷயத்திலும் சிறிது கருத்துவேற்றுமை இருக்கலாம். ஆனல் சத்தியத்துக்கும், சத்தியமின்மைக்கும் உள்ள பேதத்தை அறிதல் இயலாத காரியமன்று.

இதிலிருந்து, ஒழுக்க விதிகள் மனிதர்களுடைய அபிப்பிராயங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் கடந்து நிற்பவை என்று நாம் நன்கறிகிரேம். இவ்விதிகளை நியமம் அல்லது சட்டம் என்று சொல்லலாம்.

அரசியல் துறையில் சட்ட திட்டங்கள் உள்ளதுபோல, ஒழுக்கத் துறையிலும் ஏன் சட்ட திட்டங்கள் இருத்தல் கூடாது?

### உயர்ந்த சட்டம்

ஒழுக்கச் சட்டம் மனிதனல் இயற்றப்பெறவில்லை என்பது உண்மையே. அதுவே அதனுடைய பெருமையாகும்.

ஒழுக்க விதிகள் உண்டு என்பதை நாம் ஒப்புக்கொண்டோ மானல், அரசியல் சட்டங்களுக்கு நாம் உடன்பட்டு நடப்பது போலவே, அவற்றுக்கும் உட்பட்டு நடத்தல்வேண்டும். உண்மையில், ஒழுக்கச் சட்டம் அரசாங்கச் சட்டங்களையும், வியாபார விதிகளையும் விட உயர்ந்தது.

"வியாபார விதிகளை மீறி நடந்தால், நான் ஏழையாய்த் தானே போவேன்? போனல் போகிறேன்" என்று ஒருவன் சொல்லலாம்.

இவ்வாறே, அரசாங்க அதிகாரிகளின் கோபத்துக்குத் துணிந்து, அரசாங்கச் சட்டங்களையும் ஒருவன் அலட்சியம் செய்யலாம்.

ஆனல், ஒழுக்க விதிகளை எவனும் அசட்டை செய்யமுடியாது. "நான் பொய் சொன்னல் என்ன? மெய் சொன்னல் என்ன?" என்று கூறி எவனும் தப்பித்துக்கொள்ள முடியாது.

# இலவச பிரயாண சலுகைகள் இனிக் கிடைக்காது?

## இ. போ. ச. ஊழியருக்கு

கொழும்பு, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இப்பொழுது உள்ள இலவச பிரயாணச் சலுகையை ரத்துச்செய்ய இச்சபை ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது.

இவ்வித சலுகை அளிப்பதால் போக்குவரத்துச்சபை வருடமொன்றுக்கு 45 லட்சம் ரூபாவை இழக்கவேண்டியுள்ளது.

இச்சபையின் சேவைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிஷன், இதுபற்றி ஆராயுமெனத் தெரிகிறது.

## நகைக் கடையில் திருட்டு

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி கொத்மல வீதியிலுள்ள திரு. பி. எம். செய்யது அப்பாஸ் என்பவரின் நகைக்கடையில் 4275 ரூபாய் பெறுமதியான தங்க நகை களவாடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

நாவலப்பிட்டிப் பொலிசார் மூவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பின் விடுதலை செய்தனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித்தெரு) வெம்பிளி (கண்டி)

★ பதியே நிதியென்று பண்போடு வாழும் கட்டிய மனைவி கலா இருக்க, கண்ட பெண்களைக் காதலித்த பட்டணத்துச் சீமானின் பகட்டு வாழ்க்கை பலனளித்ததா...?
★ கள்ளமறியாது துள்ளித் திரிந்த கலாவை நோக்கி விதி எள்ளி நகையாடியது...
★ கணவனே கதியென்று கடைப்பிடித்த கலா என்ன ஆனள்...?
★ இருமனம் கலந்த திருமணம் முடிந்ததா...?

— பார்த்துப் பதில் காணுங்கள் —



பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த

இருமனம் கலந்தால் திருமணம்

பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுன ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

ஆனந்தன் — ஹேமலதா நடித்த

விஜயபுரி வீரன்

மனோஹரா (யாழ்ப்பாணம்) — சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும் மாலை 5-30க்கும்

சிவாஜி கணேசன் - பானுமதி நடித்த

மக்களைப் பெற்ற மகராசி

காலை 10-30க்கு மட்டும்

லவ் ஒவ் மைக்
LOVE OF MIKE
(ENGLISH)



டயரும்ஸ் மலிவு விற்பனை

சுத்தமான சில்க் காஞ்சிபுரம் சேலைகள்

பலவிதமான கலர்களிலும், டிசைன்களிலும் உள்ளன.
இன்னும் கொஞ்சமே கைவசமுண்டு.

உடனே முந்துங்கள்!
உங்கள் தெரிவுகளை சுணக்கமின்றி தெரிந்தெடுங்கள்.

டயரும்ஸ்
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.